வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 17.01.2024 புதன்கிழமை இதழ் : 17 பக்கங்கள் : 12

# பெப்ரவரிக்கு பின் நல்ல காலம் அதை சீர்குலைக்க சிலர் முயற்சி

## ரணிலின் திட்டங்களை தவிர மாற்றுவழி இல்லை என்கிறார் வஜிர அபேவர்த்தன



கொழும்பு, ஜனவரி 17

நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை தவிர வேறு மாற்று வழியில்லை எனவும், எனவே அனைத்து தரப்பினரும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து அந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு பங்களிக்கவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார். 11



## யாழ்ப்பாணத்தில் பட்டிப்பொங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணத்தில் பட்டிப் பொங்கல் விழாவும் கோபவனியும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

தைப் பொங்கலுக்கு மறுநாள் பட்டிப்பொங்கல் உற்சவம் நடைபெறுவது வழமை.

இந்நிலையில் யாழ். நகரில் நேற்று நடைபெற்ற பட்டிப் பொங்கல் விழாவில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன், தொழிலதிபர் ஈ.எஸ். பி. நாகரத்தினம் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (அ)

## மயிலத்தமடு பண்ணையாளர்களுக்கு ஆதரவாக யாழில் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 17

மட்டக்களப்பு பண்ணையாளர்களுக்கு நீதி கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் தமிழர் ஒருங்கிணைந்த கட்டமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர் 11



## இலங்கையின் எரிசக்தித் துறையில் முதலீடு செய்ய இதுவே நல்ல தருணம்

### பசுமை தொழில்நுட்ப மன்றத்தில் ஜனாதிபதி

டாவோஸ், ஜன. 17

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடு செய்ய இதுவே சரியான தருணம் என்றும், அடுத்து வரும் தசாப்தங்களில் இது அந்தப் பங்குதாரர்களுக்கும் இலங்கை நுகர்வோருக்கும் குறிப்பிடத்தக்க 11



## வாழ்வதற்கு வழியின்றி நாட்டு மக்கள் செங்கடலை பாதுகாக்கவேண்டுமா?

### கேள்வி எழுப்புகின்றார் கர்தினால் மல்கம்

கொழும்பு, ஜன. 17

நாட்டு மக்கள் வாழ வழியின்றி மோசமான நிலையில் இருக்கும் இத்தருணத்தில் செங்கடலை பாதுகாக்க கப்பலை அனுப்பும் செயல்பாடு இத்தருணத்தில் அவசியமா என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஆராதனைக் கூட்டமொன்றில் உரையாற்றும் போதே பேராயர் இவ்வாறு கூறியுள்ளார்.

“செங்கடலின் பாதுகாப்புக்கு கப்பலை அனுப்பும் செயல்பாடு இத்தருணத்தில் அவசியமற்ற ஒன்றாகும். நாட்டு மக்கள் பொருளாதார 11

## சஜித் அணிக்குள் முறுகல்!

கொழும்பு, ஜன. 17

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட அரசியல்வாதிகள் சிலர் கடும் அதிருப்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸவை வளர்த்தெடுப்பதிலும், கட்சியின் பொருளாதார கொள்கைககளை வகுப்பதிலும் இதுகால வரையும் முன்னணியில் நின்ற கபீர் ஹாசிம், கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இரான் விக்கிரமரத்ன போன்றோர் முக்கிய பங்களித்துள்ளனர்.

பொதுஜன பெரமுன கட்சியின் அதிருப்தியாளர்கள் குழுவில் இருந்த ஜீ.எல்.பீரிஸ், நாலக கொட ஹேவா போன்றோர் 11

## யாழ்.சிறைச்சாலை அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லை!

### நீதி அமைச்சர் விஜேதாஸ பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன. 17

ஒரு சில சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுவதுபாரிய பிரச்னையாகும். யுக்திய போதைப் பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் போது சிறைச்சாலை அதிகாரிகள் பலரும் கைது செய்யப்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

என்றாலும் யாழ்ப்பாண சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அவ்வாறான குற்றச்சாட்டு எதுவும் இல்லை என வும் அவர் கூறினார். 11

## நாட்டில் சுகாதார சேவைகள் முடக்கம் ஜனாதிபதி வெளிநாடுகளில் விநோதம்!

### சாடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, ஜன. 17

நாட்டின் சுகாதார சேவை முடங்கிக் கிடக்கும் இந்நேரத்தில் நாட்டின் தலைவர் வெளிநாடுகளுக்குச் சென்று விநோதங்களில் ஈடுபடுவது நியாயமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 67ஆவது கட்டமாக, கலாவெவ சிறிமாபுர மகா வித்தியாலயத்திற்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். 11

## விவசாய விஞ்ஞான வினாத்தாள் இரத்து

### புதிய பரீட்சை திகதி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 17

2023 (2024) க.பொ.த. உயர்தரப் பரீட்சை விவசாய விஞ்ஞான பாடத்திட்டம தொடர்பான இரண்டு வினாத்தாள்களும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை பரீட்சைகள் திணைக்களம் குறித்த பரீட்சைக்கான புதிய திகதியையும் அறிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 10 ஆம் திகதி இடம்பெற்ற, 2023 க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் (2024) விவசாய விஞ் ஞான பாடத்திற்கான IIஆம் 11

## பேச்சு நேற்று தோல்வி போராட்டம் தொடரும்!

### சுகாதார தொழிற்சங்கங்கள் தீர்மானம்

கொழும்பு, ஜன. 17

அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்த நிலையில் பணிப்பகிஷ் கரிப்புப் போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க சுகாதாரத்துறை தொழிற்சங்கள் கூட்டாக தீர்மானித் துள்ளன.

நேற்றுக் காலை முதல் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் துறை தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் சுகாதார அமைச்சர் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பல் வேறு விடயங்களையும் புரிந்துகொண்டிருப்பதா கவே அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து தெரியவந்திருக்கின்றது.

அதன் விளைவுகளை விரைவில் காணலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அவரது விஜயம் தேர்தல் பிரசாரத்திற் கானதுதான் என்று பல்வேறு தரப்பினரும் எழுதியும் பேசியும் வருகின்றனர். அப்படியெனில் அவர் பல விடயங்களை இந்த விஜயத்தின் போது நிச்சயம் தவிர்த்திருப்பார் என்றும் இது ஒரு நிலைமையை அறிந்துகொள்வதும், சில விடயங்களை புரிந்து கொள்வதற்குமான விஜயம் தான் என்றும் அறியமுடிந்தது.

ஜனாதிபதி ரணில் இந்த மாதத்தின் கடைசி வாரத்திலிருந்து, அதாவது தற்போதைய வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் தேர்தல் பிரசாரத்தை முழுவீச்சில் ஆரம்பிப்பார் என்றும், பிரசாரத்தை கவனிப்பதற்காக தனியான குழு ஒன்றை நியமித்து அவர்கள் இயங்குவதற்கான அலுவலகத்தையும் தனியாக ஏற்பாடு செய்து கொடுப்பார் என்றும் தெரிய வந்தது.

இதேவேளை, எதிர்வரும் இருபத்தியேழாம் திகதி ரணிலுக்கான பிரசாரத்தை பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து இயங்கிக் கொண்டிருக்கும் நிமால் லான்சா அணியினர் தொடங்கவிருக்கின்றனராம்.

அண்மையில், ஜனாதிபதியைச் சந்தித்த ஒரு தலைவர், நாட்டில் அவ்வப்போது வெளியிடப்படும் கருத்துக் கணிப்புக்கள் தொடர்பாக கேட்டபோது, 'அவை யாரால் நடத்தப்படுகின்றன என்பதை கவனித்தீர்களா?" என்று பதில்கேள்வி கேட்டதுடன், 'நாங்கள் தான் இன்னமும் பிரசாரத்தை ஆரம்பிக்கவில்லை என்பதைவிட, தேர்தலில் போட்டியிடுவதாகக்கூட உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லையே" என்றாராம்.

இனியும் பிரச்சாரத்தை ஆரம்பிக்காமல் இருப்பது உசிதமானது அல்ல என்று நினைத்தார்களோ தெரியவில்லை. அதனால்தான், தமக்காக தேர்தல் பரப்புரையை செய்யவிருக்கும் பொதுஜனபெரமுனவிலிருந்து பிரிந்து செயல்படும் இந்த நிமால் லான்சா குழுவினரை முதலில் களம் இறக்கவிருக்கிறார்.

எதிர்வரும் இருபத்தியேழாம் திகதி நிமால் லான்சா குழுவினர் தமது முதலாவது பிரச்சாரக் கூட்டத்தை கம்பஹாவில் ஆரம்பிக்கவிருக்கின்றனர். தமது அணியில் இருபத்தி நான்குக்கும் அதிகமான எம்.பி.க்கள் இருப்பதாக கூறும் அவர்கள், அதைவிட தனியாக ஒரு குழுவினர் பிரசன்ன ரணதுங்க தலைமையிலும் இன்னு மொரு சிறிய அணியினர் பிரதமர் தினேஸ் குணவர்த்தன தலைமையிலும் ரணிலுக்கு ஆதரவாக அவருடன் இணையவிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றனர்.

கம்பஹாவில் நடக்கும் கூட்டம், முன்னர் ஜேவிபியின் தேசிய மக்கள் சக்தி கம்பஹாவில் நடத்திய அதே மைதானத்தில் நடக்கவிருக்கின்றது. அவர்களின் கூட்டத்தில் ஐயாயிரம் பேர் கலந்துகொண்டதாக அப்போது கூறப்பட்டது. ஆனால் லான்சா குழுவினர் தமது கூட்டத்திற்கு பத்தாயிரம் பேரைக் 'கொண்டு வருவதற்கு' திட்டமிட்டிருக்கிறார்களாம். அதற்காக ஒவ்வொரு எம்.பி.க்களும் ஐநூறு பேருக்கு குறையாமல் கொண்டுவரவேண்டும் என்றும் பணிக்கப்பட்டிருக்கின்றதாம்.

தேர்தல் பிரசாரக் கூட்டம் என்பது மக்கள் தாமாக கூடுவது என்பதெல்லாம் கூட்டம் நடக்கின்ற இடத்திற்கு அருகிலுள்ள ஒருசிலர் மாத்திரமே தானாக கூடுவதுண்டு. மற்றையவர்கள் எல்லோரும் வெளியிடங்களிலிருந்து கொண்டுவரப்படுபவர்கள் தான்.

ஜே.வி.பியின் கூட்டங் களுக்கு 'திரளுகின்ற' மக்கள் கூட்டமும் அவ்வாறு கொண்டுவரப்படுவது தான் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

இவ்வாறு கொண்டுவரப்படுபவர்களோ அல்லது கூட் டத்தில் 'விடுப்பு' பார்ப்பதற்காக கூடுகின்றவர்களோ அதிகமாக இருந்தாலும், அவை வாக்காக மாறுமா என்பது தெரியவில்லை. ஆனால், அப்படி பெருந் தொகையான மக்கள் கூட்டத்தை ஊடகங்கள் வாயிலாக காண்கின்றவர்கள், மன தில் ஒரு தாக்கத்தை அது ஏற்படுத்தும் என்பதும் நாம் கவனிக்க வேண்டியதுதான்.

**- ஊர்க்குருவி.**

# மன்னார் எருக்கலம்பிட்டியில் 14,000 சங்குகளுடன் மூவர் கைது!

மன்னார், ஜன. 17

மன்னார் கடற்படைக்கு கிடைக்க பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து எருக்கலம்பிட்டி பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது அனுமதியளிக்கப்பட்ட அளவைவிட சிறிய அளவிலான சங்குகளை உடைமையில் வைத்திருந்த பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

நேற்று முன் தினம் திங்கட்கிழமை மதியம் கடற்படைக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக மன்னார் பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருடன் இணைந்து மன்னார் மாவட்டத்துக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் ஆலோசனைக்கு அமைய பொலிஸ் அத்தியட்சகர் ஹரத்தின் நெறிப்படுத்தலில் மன்னார் குற்றப் புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி மனல தலைமையினான குழுவினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பு



நடவடிக்கையின்போது எருக்கலம்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் அனுமதி வழங்கப்பட்ட அளவை விட அதிக அளவிலான சங்குகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததை கண்டறிந்தனர்.

அவற்றை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தின் பெயரில் மூவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த களஞ்சியசாலையில் 20000 சங்குகளே களஞ்சியப்படுத்த அனுமதி காணப்பட்ட நிலையில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சங்குகளும் வளர்ச்சி நிலை அடையாத சங்குகளும் களஞ்சியப்படுத்திய தன் அடிப்படையில் வீட்டின் உரிமையாளர் உட்பட பணியாளர்கள் இருவர் உள்ளடங்கலாக மூவர் கைது செய்யப்பட்டனர்.

(அ)

# ரெலிக்கொம் பங்குகளை வாங்க ஆர்வம் காட்டும் முகேஷ் அம்பானி

## வலுக்கும் எதிர்ப்பு, நாடு முழுவதும் போராட்டம்

கொழும்பு, ஜன. 17

இந்தியாவின் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸின் தொலைத்தொடர்பு பிரிவான ஜியோ பிளாட்ஃபார்ம்ஸ், இலங்கை அரசுக்கு சொந்தமான சிறிலங்கா ரெலிகொம் பங்குகளை வாங்க விருப்பம் தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை அரசாங்கம், நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தி வருகின்றது. அதில் ஒருபகுதியாக ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி முதல் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது. ஜனவரி 12ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி, மூன்று சர்வதேச முதலீட்டாளர்கள் ரெலிகொம் நிறுவனத்தில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆசியாவின் மிகப் பெரும் செல்வந்தர்களில் ஒருவரான முகேஷ் அம்பானியின் ஜியோ நிறுவனமும் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி நெருக்கடியில் இருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச நாணய நிதியம் தற்போது ஆதரவு வழங்கியுள்ளது.

அதன்படி, நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

எவ்வாறாயினும், ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு கடும் எதிர்ப்புகள் வெளியாகியுள்ளன. நாடு முழுவதும் உள்ள ரெலிகொம் ஊழியர்கள் போராட்டத்தில் குதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அம்பாந்தோட்டையில் அகற்றப்பட்ட

# கிரனைட் கற்களை மாலைதீவுக்கு அனுப்ப அமைச்சரவை அங்கீகாரம்?

கொழும்பு, ஜன. 17

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும் போது அகற்றப்பட்ட ஒரு மில்லியன் மெற்றிக் தொன் கிரனைட் கற்களை மாலைதீவுக்கு அனுப்ப அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் உள்ள கருங்கற்களை உரிய முறையில் பயன்படுத்தாவிட்டால் கடலில் வீசப்படும் என துறைமுக அதிகாரசபை தெரிவித்ததையடுத்து, அவற்றை விரைவில் மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்வ தற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, விலைமனு கோரல் மூலம் முக்கிய தரப்பில் உள்ள ஒருவர் கருங்கல் இருப்பை பெற்றுள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், குறித்த துறைமுகத்திற்கு அருகில் உள்ள பல தனியார் காணிகளில் அந்த நபர் இந்த கிரனைட் கற்களை குவித்து வைத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில், இதே செய்தி தொடர்பாக பிரபல ஊடகம் ஒன்று நடத்திய விசாரணையில்,

இலங்கையின் பிரபல வர்த்தகரான நந்தன லொக்குவிதான என்பவருக்குச் சொந்தமான நிறுவனமொன்றுக்கு நன்மை பயக்கும் வகையில் குறித்த அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, இது தொடர்பில் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் கலாநிதி சஞ்சய் பெரேரா தெரிவித்ததாவது: -

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் உள்ள கருங்கற்களை ஏற்றுமதி செய்வது தொடர்பில் இதுவரை அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கவில்லை.

ஏற்றுமதிக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் எத்தனை கருங்கற்கள் உள்ளன, அவை ஏற்றுமதிக்கு ஏற்றதா இல்லையா என்பதை பரிசோதிக்கும் என அதன் தலைவர் தெரிவித்தார்.

(அ)

Eelanadu
17.01.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், தை 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அநுர குமார கூறும் அந்த வழி என்ன?

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆட்சியை கைப்பற்றுவது தொடர்பில் பேசியிருகின்றார். ஆனால் அவரது பேச்சின் உள்ளடக்கம் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது - அதாவது, ஏதாவது ஒரு வழியிலாவது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்று கூறியிருக்கின்றார். அது என்ன வழி? இந்து சமுத்திர பிராந்தியத்திற்குள் சீனா அதன் விஸ்தரிப்பை தீவிரப்படுத்தி வருகின்றது. மேற்குலகம் ரஷ்ய - உக்ரெய்ன் மற்றும் இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தத்திற்குள் மூழ்கியிருக்கும் நிலையில், சீனாவோ யுத்தமில்லாமல் வெற்றியை பெறும் தந்திரோபாயத்தில் முன்னேறி வருகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், மாலைதீவின் புதிய ஜனாதிபதி, 'இந்தியா வெளியில்' கோஷத்தை கையிலெடுத்திருக்கின்றார். சீன சார்ப்பு கொள்கையை வெளிப்படையாக கடைப்பிடிக்க முற்படுகின்றார். இதுவரையில் மாலைதீவு பின்பற்றிவந்த பாரம்பரிய கொள்கை நிலைப்பாட்டுக்கு பாதகமாக, சீனாவிற்கு விஜயம் செய்திருக்கின்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இந்த ஆண்டு இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தல் இதுவரையான தேர்தல்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான மும்முனை போட்டி இடம்பெறவுள்ளது. இந்த மும்முனைப் போட்டி வெறுமனே ஜனாதிபதித் தேர்தலை மட்டும் இலக்கு வைத்து இடம்பெறப் போவதில்லை - அதற்கு மாறாக, ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்றாலும் கூட, நாடாளுமன்றத்தில் தங்களின் செல்வாக்கை தக்க வைத்துக்கொள்ளும் உத்தியையும் உள்ளடக்கியிருக்கும். இந்த மும்முனைப் போட்டியில் இம்முறை வழக்கத்துக்கு மாறாக, ஜே.வி.பி பெரும் சவாலாக வருவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், எந்த வழியிலாவது ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்னும் கோஷத்தை அநுரகுமார முன்வைக்கின்றார்.

இதுவரையில் இலங்கைத் தீவை மாறி, மாறி பாரம்பரிய கட்சிகளே ஆட்சி செலுத்திவந்திருக்கின்றன. இதில் முதல் உடைவாகவே ராஜபக்ஷக்கள் எழுச்சியுற்றனர். அதற்கு யுத்த வெற்றி பக்கபலமாக இருந்தது. யுத்த வெற்றியில்லாவிட்டால் ராஜபக்ஷக்கள் எழுச்சியுற்றிருக்க முடியாது. ஆனால் ராஜபக்ஷக்கள் சீன சார்ப்பு கொள்கையை கடைப்பிடித்து, இலங்கையின் வெளிவிவகார நடைமுறையை மாற்றியமைத்தனர். சீனாவுக்காக கதவுகளை தாராளமாக திறந்துவிட்டனர்.

தற்போது இரண்டாவது கட்டம் ஆரம்பிக்கின்றது. ராஜபக்ஷக்கள் வீழ்சியுற்றிருக்கின்ற சூழலில், முற்றிலும் ராஜபக்ஷக்களை மட்டும் நம்ப முடியாத நிலைமை இருக்கின்றது. இதனை சரி செய்வதற்கு புதிய சக்திகளும் சீனாவுக்குத் தேவை. இவ்வாறானதொரு பின்புலத்தில், இந்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சீனா அதிக நாட்டத்தை காண்பிக்கும். மாலைதீவில் தங்களுக்கு சாதகமான ஒருவர் ஆட்சியை கைப்பற்றியிருக்கும் நிலையில், இலங்கையில் தங்களின் ஆதரவு பெற்ற கட்சிகளை அல்லது நபர்களை அதிகாரத்திற்கு கொண்டுவருவதில் சீனா அதிக நாட்டத்தை செலுத்தும். சீனாவின் இலக்கு ஒன்றுதான் - அதாவது, இந்தியாவின் செல்வாக்கை பலவீனப்படுத்துவது. அதற்கு ஏற்றவாறு, கட்சிகளை பலப்படுத்தி, இந்தியாவுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்துவது. இந்தப் பின்புலத்தில் ஜனாதிபதி தேர்தல் முன்னர் எப்போதுமில்லாதளவிற்கு சிக்கல்கள் கொண்டதாக இருக்கலாம். இவ்வாறானதொரு சூழலில் தமிழ் கட்சிகள் தேர்தல் தொடர்பில் அதிகம் கவனம் கொள்ள வேண்டும்.

## நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி ரத்து செய்யும்

### ஹர்ச டி சில்வா கூறுகிறார்

*கொழும்பு, ஜன. 17*

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை அரசாங்கத்தின் முயற்சிகளை கடுமையாக எதிர்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சடிசில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அமையவுள்ள ஐக்கியமக்கள் சக்தி அரசாங்கம் உடனடியாக நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை இரத்துச்செய்யும் என அவர் தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

மெட்டா கூகுள் யூடியுப் போன்ற பொருளாதாரத்திற்கு அவசியமான பாரிய தளங்களுடனான உறவுகளிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட மாட்டோம் எனவும் அவர் கூறினார்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் குறித்து அர்ப்பணிப்புடன் உள்ள நாங்கள் சிறுவர் பாலியல் மற்றும் ஏனைய பாரிய இணைய குற்றங்களை தடுப்பதற்காக பாரிய தளங்களுடன் இணைந்து செயற்படுவோம் எனவும் குறிப்பிட்டார்.

இலங்கை சமூகத்தின் நலனிற்கு இது மிகவும் அவசியமானது அவசர நடவடிக்கைகளிற்கு பதில் பயனளிக்ககூடிய தீர்வுகளை முன்வைப்போம் எனவும் ஹர்சா டிசில்வா தெரிவித்தார். (அ)

## மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர் சுகாதார ஊழியர்கள்

*மன்னார், ஜன. 17*

நாடளாவிய ரீதியில் வைத்திய சாலையின் சுகாதார ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்டது.




குறித்த பணிக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்களும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் இன்று புதன்கிழமை காலை 8 மணி வரை பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

இதனால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சேவையை தவிர ஏனைய அனைத்து சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதன் காரணமாக தூர இடங்களில் இருந்து வருகை தந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

மேலும் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் சுகாதார ஊழியர்கள் காலை 10 மணி முதல் 11 மணி வரை மன்னார் மாவட்ட வைத்திய சாலை முன் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அவலோகிதேஸ்வரவுக்கு விளக்கமறியல்

*கொழும்பு, ஜன. 17*

அவலோகிதேஸ்வரா என்ற பெயரில் தோன்றி பௌத்த மதத்தை இழிவுபடுத்தும் வகையில் பிரசங்கம் செய்த வேளையில் கைதுசெய்யப்பட்ட மஹிந்த கொடித்துவக்கு எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.


கணனி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளினால் பன்னிப்பிட்டியவில் வைத்து சந்தேகநபர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகிந்த கொடித்துவக்கு என்ற போதகர், கடந்த 1ஆம் திகதி எகிப்தில் இருந்து இலங்கைக்கு வந்திருந்த நிலையில், அவர் பல இடங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றுவதும், அவரைப் பின்பற்றுபவர்கள் அவருக்கு வணக்கம் செலுத்துவதும் போன்ற காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பரவின.

இதன்படி, குறித்த நபரின் விரிவுரைகள் மூலம் புத்தரின் குணாதிசயங்கள் மற்றும் பௌத்த மத போதனைகள் அவமதிக்கப்படுவதாக பௌத்த விவகார ஆணையாளர் நாயகம் உட்பட பல தரப்பினரும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இதன்படி, கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறித்த நபரிடம் விசாரணைகளை ஆரம்பித்ததுடன், இது தொடர்பில் கோட்டை நீதவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்து சந்தேகநபருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் பெற்றுக்கொண்டனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலை ஆட்களால் பிரச்சினை வரும். மேலதிகாரிகளுடன் விவாதம் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார். மதிப்புக் கூடும்.

**மிதுனம்**
கோபத்தை கட்டுப் படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். செல்வாக்கு உயரும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை முடியாமல் திணறுவீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும். பொறுமைத் தேவைப்படும்.

**கன்னி**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத் தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நன வாகும் நாள்.

**தனுசு**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்த வர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள்.தைரியம் கூடும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பு அதிகரிக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப் பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

# தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை மத்திய பாஜக வேடிக்கை பார்க்கிறது!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

சென்னை, ஜன. 17

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் பகுதியில் இருந்து, மீன் பிடிக்க சென்ற 12 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதையும், அவர்களது வலைகளும், படகுகளும் உடைத்து சேதப்படுவதையும் மத்திய பாஜக அரசு மவுன சாட்சியாக வேடிக்கை பார்த்து வருகிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினம் பகுதியில் இருந்து, வங்கக் கடலில் மீன் பிடிக்க சென்ற 12 மீனவர்கள் நேற்று முன் தினம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, காங்கேசன் துறை முக கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 12 மீனவர்களும் எல்லை தாண்டி நுழைந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

மீனவர்களை கைது செய்த கடற்படையினர், அவர்களிடம் இருந்த மீன்பிடி வலைகளை அறுத்தெறிந்து நாசம் செய்துள்ளனர். படகுகளை அபகரித்து எடுத்துச் சென்றுள்ளனர். அண்மையில் நாகை மாவட்ட மீனவர்கள் எட்டுப் பேர் கைது செயப்பட்டதை தொடர்ந்து நடைபெற்ற இந்தச் சம்பவம் மீனவர்களை பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளியுள்ளது. இலங்கை கடற்படையின் அத்துமீறல்களும், தாக்குதலும் நிறுத்தப்படுவதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.

இதற்கான முறையில் இலங்கை அரசுடன் ராஜீய முறை அழுத்தம் தந்து தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால், தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதையும், அவர்களது வலைகளும், படகுகளும் உடைத்து சேதப்படுவதையும் பாஜக மத்திய அரசு மவுன சாட்சியாக வேடிக்கை பார்த்து வருகிறது. மீனவர் நலனை பாதுகாக்காத பாஜக மத்திய அரசின் அலட்சியப் போக்கை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், மீனவர்களை விடுவித்து அழைத்து வர ஏற்பாடு செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது, என்று அவர் கூறியுள்ளார்.

(அ)

# “பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி திருவள்ளுவர்”

## ஆளுநர் ரவியின் ருவீட்டால் சர்ச்சை

சென்னை, ஜன. 17

காவி உடையில் இருக்கும் திருவள்ளுவரின் உருவப்படத்தைப் பகிர்ந்து, அவரை சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவி என்று குறிப்பிட்டு சமூகவலைத்தளத்தில் கருத்தைப் பகிர்ந்து சர்ச்சையைக் கிளப்பியுள்ளார் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி.

திருவள்ளுவர் தினத்தை ஒட்டி தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி வெளியிட்ட சமூகவலைதளப் பதிவில், “சூதிருவள்ளுவர் தினத்தில், ஆன்மிக பூமியான நமது தமிழ்நாட்டில் பிறந்த, மதிப்புக்குரிய கவிஞரும், சிறந்த தத்துவஞானியும், பாரதிய சனாதன பாரம்பரியத்தின் பிரகாசமான துறவியுமான திருவள்ளுவருக்கு எனது பணிவான அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலத்தால் அழிக்க இயலாத அவரது ஞானம் நமது தேசத்தின் சிந்தனை மற்றும அடையாளத்தை வடிவமைத்து, வளப்படுத்தி ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் வழிகாட்டியாகவும், உத்வேகத்தின் ஆதாரமாகவும் இருக்கிறது. இந்தப் புனித நாளில் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளுவரை சனாதன பாரம்பரியத்தின் துறவி என்று அவர் குறிப்பிட்டுள்ளதும், காவி உடையில் திருவள்ளுவரை சித்தரித்திருப்பதும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு திருவள்ளுவர் தினத்தில் ஆளுநர் தனது ட்வீட்டில், “திருக்குறள் பாரதிய கலாசாரத்தையும் நாகரிகத்தையும் வடிவமைத்து வளர்த்தது” என்று குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் காவி உடையில் திருவள்ளுவரை சித்தரித்திருப்பது கடும் எதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

(அ)

# திருவள்ளுவரின் ஆழ்ந்த ஞானம் வாழ்க்கையின் பல அம்சங்களில் எங்களுக்கு வழிகாட்டுகின்றது

## பிரதமர் மோடி கருத்து

சென்னை, ஜன. 17

தமிழகம் முழுவதும் திருவள்ளுவர் தினம் இன்று கொண்டாடப்பட்டு வரும் நிலையில், “தலைசிறந்த தமிழ்ப் புலவரை நினைவுகூரும் வகையில் இன்று நாம் திருவள்ளுவர் தினத்தைக் கொண்டாடுகிறோம். திருக்குறளில் உள்ள அவரது ஆழ்ந்த ஞானம் வாழ்க்கையின் பல அம்சங்களில் நமக்கு வழிகாட்டுகிறது” என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தமிழர் திருநாளான பொங்கல் திருநாள் நேற்று முன் தினம் தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்று மாட்டுப் பொங்கல் கொண்டாடப்பட்டு வருகிறது. அதோடு, தமிழகம் முழுவதும் திருவள்ளுவர் தினம் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இதனையொட்டி பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், பிரதமர் மோடி இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளதாவது-

தலைசிறந்த தமிழ்ப் புலவரை நினைவுகூரும் வகையில் இன்று நாம் திருவள்ளுவர் தினத்தைக் கொண்டாடுகிறோம். திருக்குறளில் உள்ள அவரது ஆழ்ந்த ஞானம் வாழ்க்கையின் பல அம்சங்களில் நமக்கு வழிகாட்டுகிறது. காலத்தால் அழியாத அவரது போதனைகள் நல்லொழுக்கம் மற்றும் நேர்மையில் கவனம் செலுத்த சமூகத்தை ஊக்குவிக்கிறது, நல்லிணக்கம்



மற்றும் புரிந்துணர்வு கொண்ட உலகத்தை உருவாக்குகிறது. அவர் எடுத்துரைத்த அனைவருக்குமான விழுமியங்களைத் தழுவுவதன் மூலம் அவரது தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும் நமது உறுதிப்பாட்டை நாம் வலியுறுத்துவோம்” எனத் தெரிவித்துள்ளார்.

(அ)

# சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு!

**வைத்தியசாலைகளில் முப்படையினர் குவிப்பு**





வவுனியா, ஜன. 17

**சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணி முதல் அடையாள பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்தன.**

வைத்தியர்களுக்கு அரசாங்கம் வழங்க தீர்மானித்துள்ள 35,000 ரூபா மேலதிக கொடுப்பனவை தங்களுக்கும் வழங்க வேண்டுமென தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தன.

இப்போராட்டத்தில் மருத்துவ ஆய்வுக்கூட நிபுணர்கள், கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள், மருந்தாளுநர்கள், தாதியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் நோயாளர் காவு வண்டி ஊழியர்கள் உள்ளிட்ட 75 தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டன.

இதேவேளை, சுகாதார தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தத்தை முறியடிக்க இராணுவத்தினரைப் பயன்படுத்தினால், தொழிற்சங்கப் போராட்டத்தை மேலும் விஸ்தரிப்போம் என சுகாதார தொழிற்சங்கங்களின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பணிப்புறக்கணிப்பு காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளுக்கு முப்படையினர் வரவழைக்கப்பட்டனர்.

சுகாதார அமைச்சின் கோரிக்கைக்கு அமைய முப்படையினர் வைத்தியசாலைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வவுனியா வைத்தியசாலை சுகாதார ஊழியர்களும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்த பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக வவுனியா வைத்தியசாலை பல ஸ்தம்பிதம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சவூதியில் விபத்துக்குள்ளானவர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்!

கொழும்பு, ஜன. 17

சவூதி அரேபியாவில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளான ரசிந்த லியனாராச்சி நேற்று செவ்வாய்க்கிழமை காலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்.

நேற்றுக் காலை 6.10 மணியளவில் சவூதி அரேபியாவின் ரியாத்திலிருந்து விமானம் மூலம் அவர் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்.

அம்புலன்ஸ் ஒன்று விமானத்துக்கு அருகில் சென்று அவரை ஏற்றிச் சென்றதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலையீட்டில், அவர் நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அவரது பணியிடத்தில் ஏற்பட்ட விபத்து காரணமாக அங்குள்ள வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு 3 மாதங்களுக்கும் மேலாக சிகிச்சை பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பாராளுமன்ற சபை அமர்வு 24 ஆம் திகதியுடன் நிறைவு

கொழும்பு, ஜன. 17



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது சபை அமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

அதற்கமைய, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது சபை அமர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற சபை அமர்வை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பான வர்த்தமானியை எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி வெளியிடுவார் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

பராளுமன்ற சபை அமர்வு முடிவுக்கு கொண்டுவரப்பட்டவுடன் கோப் மற்றும் கோபா உள்ளிட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுக்களின் பதவிக்காலங்களும் முடிவடையவுள்ளன.

அதற்கமைய பாராளுமன்ற சபை அமர்வு மீள ஆரம்பமான பின்னர் குறித்த தெரிவுக்குழுக்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளன. (அ)

பாதாளக் குழு மோதல்

## மட்டக்குளி பகுதியில் ஒருவர் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜன. 17

கொழும்பு, மட்டக்குளி ரந்திய உயன தொடர்மாடி குடியிருப்புக்கு அருகில் நேற்று முன் தினம் இரவு நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 40 வயதுடைய நபர் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. எனினும், பாதாள குழுக்களுக்கிடையிலான மோதலால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தியாவில் தலைமறைவாகி இருக்கும் பாதாள குழு உறுப்பினர் ஒருவருக்கு நெருக்கமானவர்மீதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது. (அ)

## பாணந்துறைக் கடலில் அலைகளால் அடித்துச் செல்லப்பட்ட நால்வர் மீட்பு!

கொழும்பு, ஜன. 17

பாணந்துறை கடலில் நீராடிய நால்வர் கடலில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இரு இளைஞர்களும் இரண்டு யுவதிகளுமே இவ்வாறு காப்பாற்றப்பட்டதாக பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

25 மற்றும் 19 வயதுடைய இரு யுவதிகளும் 17 மற்றும் 23 வயதுடைய இரண்டு இளைஞர்களுமே காப்பாற்றப்பட்டனர்.

இவர்கள் கொனாபொல, சிலாபம் பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர். (அ)

## ஒரு இலட்சம் கோடி ரூபா நிலுவை வரியை அறவிட அரசு நடவடிக்கை எடுக்கவில்லை!

**சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு**



கொழும்பு, ஜன. 17

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அமுல்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் முக்கிய நிபந்தனைகளை புறக்கணித்து செயற்படுகிறது. ஒரு இலட்சம் கோடி ரூபாய் நிலுவை வரியை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஐக்கிய குடியரசு முன்னணியின் கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடும், நாட்டு மக்களும் இன்று பொருளாதார ரீதியில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதற்கு ராஜபக்ஷர்களே காரணம். இதனை அரசியலுக்காக குறிப்பிடவில்லை. ராஜபக்ஷர்கள் பொருளாதார படுகொலையாளிகள் என்பதை உயர்நீதிமன்றம் பகிரங்கப்படுத்தியுள்ளது.

வீழ்ந்துள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதாக ராஜபக்ஷர்கள் குறிப்பிடுவது நகைப்புக்குரியது. நாட்டையும், நாட்டு மக்களையும் அதள பாதாளத்துக்குள் தள்ளியதை ராஜபக்ஷர்கள் மறந்து விட்டார்கள்.

2019 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் 69 இலட்ச மக்கள் செய்த தவறால் ஒட்டுமொத்த மக்களும் இன்று நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்பன். முறையற்ற நிர்வாகத்தால் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ள ராஜபக்ஷர்கள் அரசியலில் இருந்து முழுமையாக புறக்கணிக்கப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. பரிந்துரைக்கப்பட்ட யோசனைகளை செயற்படுத்துவதாக குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. வற் வரி ஊடாக அரச வருமானத்தை 60 கோடி ரூபா வரை பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முக்கிய வர்த்தகர்கள், அரசியல் செல்வாக்கு உள்ளவர்களிடமிருந்து மதுவரி திணைக்களம், தேசிய இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் சுமார் ஒரு இலட்சம் கோடி ரூபா வரியை அறவிடவில்லை. இந்த நிலுவை வரியை அறவிட அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் தெரிவு செய்யப்பட்ட வகையில் செயற்படுத்தப்படுகிறது. நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் விடயங்கள் மாத்திரம் செயற்படுத்த அவதானம் செலுத்தப்படுகிறது. வங்குரோத்து நிலையிலும் செல்வந்தர்களுக்கு விசேட சலுகை வழங்கப்பட்டுள்ளது-என்றார்.

## மண்சரிவினால் 7 நாட்களாக தடைப்பட்டிருந்த வீதி திறப்பு

கொழும்பு, ஜன. 17

மண்சரிவு காரணமாக சுமார் 7 நாட்களாக தடைப்பட்டிருந்த பதுளை - பண்டாரவளை வீதி போக்குவரத்துக்காக திறக்கப்பட்டுள்ளது.

குறித்த வீதி நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டதாக பதுளை மாவட்ட செயலாளர் பிரபாத் அபேவர்தன தெரிவித்தார்.

கடந்த 9ஆம் திகதி பதுளை - பண்டாரவளை வீதி ஏழாம் கட்டைப் பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு காரணமாக சுமார் 7 நாட்களாக போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

வீதியில் காணப்பட்ட பாறைகள் மற்றும் மரங்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அகற்றி, பள்ளங்கள் மற்றும் விரிசல்களை சரிசெய்ததன் பின்னர், தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி அமைப்பின் புவியியலாளர்கள் வீதி பயணிப்பதற்கு ஏற்ற நிலையில் உள்ளதா என சோதித்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் நாம் அவசரப்படப் போவதில்லை!

## பெரமுன பொதுச் செயலர் கூறுகிறார்



கொழும்பு, ஜன. 17

**பொருளாதாரத்தை இல்லாதொழித்தது யார் ? நாட்டை அபிவிருத்தி செய்தது யார்? என்ற உண்மையை நாட்டு மக்களுக்கு வெகுவிரைவில் பகிரங்கப்படுத்துவோம். ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் நாங்கள் அவசரப்பட போவதில்லை. சஜித், அனுரவுக்கு காலவகாசம் வழங்கியுள்ளோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

தலவத்துகொட பகுதியில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய செயற்திட்டத்துடன் கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுத்தோம். பொய்யான குற்றச்சாட்டுகள் தற்போது வலுப்பெற்றுள்ளன.

நாட்டுக்கு சேவையாற்றிய நபரை திருடர் என்று விமர்சிப்பது இயல்பாகியுள்ளது.நாட்டு மக்களின் அரசியல் சிந்தனைகளை திரிபுப்படுத்தும் வகையில் ஒரு தரப்பினர் செயற்படுகிறார்கள்.

சூரியன், சந்திரன் மற்றும் உண்மையை மறைக்க முடியாது என்ற தொனிப்பொருளின் கீழ் நாடளாவிய ரீதியில் அரசியல் கூட்டங்களை நடத்தவுள்ளோம்.

பொருளாதாரத்தை யார் இல்லாதொழித்தது, யார் நாட்டை அபிவிருத்தி செய்தது என்பதை வெகுவிரைவில் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துவோம்.

நாட்டு மக்கள் மத்தியில் செல்வதற்கு எமக்கு பிரச்சினை ஏதுமில்லை.மக்கள் மத்தியில் ராஜபக்ஷர்களுக்கு இன்றும் நன்மதிப்பு உள்ளது.பெரும்பாலான மக்கள் ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை இன்றும் எதிர்பார்க்கிறார்கள்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து கட்சி மட்டத்தில் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை.

கட்சியின் ஒருசில உறுப்பினர்களின் தனிப்பட்ட நிலைப்பாட்டை கட்சியின் நிலைப்பாடு என்று கருத முடியாது. ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் நாங்கள் அவசரபட போவதில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதி பதவி தொடர்பில் கனவு காண்பதற்கு அவர்களுக்கு நாங்கள் காலவகாசம் வழங்கியுள்ளோம்-என்றார். (அ)

# கல்வி மோசடி குறித்து அரசாங்கம் விசாரணை!

கொழும்பு, ஜன. 17

மேலதிக வகுப்புகளுக்கு மாணவர்களை அதிகளவில் இணைத்துக்கொள்ளும் நோக்கில் பரீட்சை வினாத்தாள்களை ஆசிரியர்கள் சமூக வலைத்தளங்களில் வெளியிடுகின்றார்களா என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த வருட உயர் தரப் பரீட்சையின் விவசாய பாடத்தின் இரண்டாம் வினாத்தாள் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டமை தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போது, இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

முன்னரும் இதுபோன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளன. எனினும், தற்போதுள்ள போட்டிகளின் அடிப்படையில் சில ஆசிரியர்கள் இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இது பாரதூரமான விடயமாகும் என்பதால் பரீட்சைகள் திணைக்களம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ)

# 'வடக்கிற்கான உங்கள் நுழைவாயில்' வர்த்தகக் கண்காட்சி 19 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜன. 17

2024 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

வடமாகாணத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றும் அதேவேளை அதனை மாற்றியமைக்கும் வருடாந்த நிகழ்வாக இந்த கண்காட்சி இடம்பெறுகிறது.

இந்த கண்காட்சி எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

'வடக்கிற்கான உங்கள் நுழைவாயில்' என்ற தொனிப்பொருளில் இந்த வர்த்தக கண்காட்சி இந்த முறை நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சட்டவிரோதமான முறையில் சிலர் வற் வரியை அறவிடுவதாக தகவல்!

கொழும்பு, ஜன. 17

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யாமல், சில வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் நுகர்வோரிடமிருந்து 18 சதவீதம் வரை வற் வரியை சட்டவிரோதமான முறையில் அறவிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில், பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பற்றுச்சீட்டுக்களில் வற் வரிக்கான பதிவு இலக்கத்தை குறிப்பிடாது, வற் வரி அறவிடப்பட்டால், அது தொடர்பில் நுகர்வோர் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய முறைப்பாடுகளை உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமாகவோ அல்லது **cgir@ird.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவோ அனுப்ப முடியும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# சிறைச்சாலைகளில் கைதிகளின் நெரிசல் நிலை மேலும் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 17

சிறைச்சாலைகளில் கைதிகளின் நெரிசல் நிலை மேலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலைகளின் கொள்ளளவை காட்டிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 232 வீதமாக அதிகரித்துள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

கைதிகளை பராமரிக்க ஆண்டுதோறும் 800 கோடி ரூபாய்க்கு அதிகமாக அரசாங்கம் செலவிடுவதாக குறிப்பிடப்படுகின்றது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் 53 சதவீதமானோர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், நாடளாவிய ரீதியில் உள்ள 27 சிறைச்சாலைகளில் 187 கழிவறைகளுக்கான பற்றாக்குறை நிலவுகின்றன.

தற்போதுள்ள கழிவறைகளில் 287 கழிவறைகளை புனரமைக்க வேண்டிய நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறைச்சாலைகளின் நெரிசலை குறைப்பதற்காக கைதிகளுக்கு பிணை வழங்கப்பட்டுள்ள போதிலும் பிணை நிபந்தனைகளை நிறைவேற்ற முடியாமல் 1,795 கைதிகள் சிறையில் இருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தரவுகளின் அடிப்படையில் 2011 முதல் 2020 ஆம் ஆண்டு வரையில், வன்முறைகள் காரணமாக இரண்டு சிறைச்சாலைகளின் கட்டிடங்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி ரணிலுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்வேண்டும்

## கோருகிறார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, ஜன. 17

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாட்டை ஸ்திரப்படுத்த மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க வலியுறுத்துகின்றார்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு தற்போதைய ஜனாதிபதியே பொருத்தமானவர் என்பது தனது தனிப்பட்ட நம்பிக்கை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாடு சோதனைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான தருணத்தில் இல்லை எனவும் அமைச்சர் மேலும் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறான சோதனைகளை மேற்கொள்வதன் மூலம் நாடு மேலும் பாதாளத்தில் விழும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மினுவாங்கொடை மற்றும் கம்பஹா உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளுடன் உடுகம்பல பிரதேசத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சியினர் என்ன செய்வார்கள் என அனைவரும் கேட்கின்றனர். மொட்டு இன்னும் வேட்பாளரை தெரிவு செய்யவில்லை என்பதை நான் மிகவும் பொறுப்புடன் கூறுகின்றேன். வேட்பாளரை முன்வைப்பதா இல்லையா என்பது குறித்து கட்சி இன்னும் ஆலோசித்து வருகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கப்பட வேண்டும் என நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன். மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியாக நாட்டை ஆள்வதற்கான மிக உயர்ந்த தகுதிகளை அவர் பெற்றுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நாடும் அதன் மக்களும் மிகவும் சோகமான விதியை எதிர்கொண்டனர். மக்கள் வரிசையில் நின்று கடும் அவதிக்குள்ளாகினர். ஆனால் அன்று இருந்த பல பிரச்சினைகள் இன்று தீர்க்கப்பட்டு வருகின்றன. ஆனால் இன்னும் பல பிரச்னைகள் உள்ளன. இந்த நாட்டு மக்கள் எப்போதும் தேசியப் பிரச்னைகளைத் தீர்ப்பதன் அடிப்படையிலேயே ஜனாதிபதிகளைத் தெரிவு செய்திருக்கிறார்கள். 2004ஆம் ஆண்டு போரில் வெற்றி பெறுவதற்காக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானார். 2015ஆம் ஆண்டு நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்பட்டார். 2019 இல் கோத்தாபய ராஜபக்ச வெற்றி பெற்று தேசிய பாதுகாப்பை உறுதி செய்தார். எனவே நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்க இன்று ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க விரும்புகின்றோம்.

எனவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்டால், கூட்டணியில் உள்ள கட்சியாக அவருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறேன். தற்போதைய ஜனாதிபதி ஜனாதிபதி தேர்தலில் "தேசிய வேட்பாளராக" போட்டியிடவேண்டும்.

இப்போது ஜனாதிபதி வேட்பாளர்கள் மழை பொழிகிறார்கள். பல்வேறு தேசத்தில் இருந்து வேட்பாளர்கள் வருகின்றனர். ஒரு பெட்டிக்கடை அல்லது நிறுவனத்தை நீங்கள் கட்டுப்படுத்துவது போல் ஒரு நாட்டை நீங்கள் கட்டுப்படுத்த முடியாது. யார் வேண்டுமானாலும் பெருமை பேசலாம். ஆனால் எல்லோரும் வேலை செய்ய முடியாது. பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், ஜனரஞ்சக அரசை நிறுவுவதற்கும் எமக்கு மிகக் குறைந்த காலமே உள்ளது. எனவே, மற்ற வேட்பாளர்களுக்கு ஒரு வாய்ப்பு கூட வழங்க நாங்கள் வாய்ப்பளிக்கவில்லை. இது சோதனைக்கான நேரம் அல்ல. தற்பெருமை காட்டாமல் உழைக்கும் எதிர்காலத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. எனவே தற்போதைய ஜனாதிபதியே தற்போது ஜனாதிபதி பதவிக்கு மிகவும் தகுதியானவர்-என்றார். (அ)

# டிஜிற்றல் பொருளாதார வளர்ச்சியை நிகழ்நிலை காப்புச் சட்டம் தடுக்கும்!

## ஆசிய இணையத்தளக் கூட்டமைப்பு கவலை

கொழும்பு, ஜன. 17

**நிகழ்நிலை காப்புச் சட்டம் பாரிய திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ள ஆசிய இணையத்தள கூட்டமைப்பு, தற்போதைய வரைபு இலங்கையில் டிஜிற்றல் பொருளாதார வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகவும் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.**

ஆசிய இணையத்தள கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநர் ஜெஃப் பெய்ன், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸூக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தச் சட்டத்தின் வடிவம் கணிசமான சவால்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இதில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். சட்டத்தின் அவசியம் பற்றி ஆசிய இணையத்தள கூட்டமைப்பு ஒப்புக்கொள்கிறது.

ஆனால், முன்மொழியப்பட்டுள்ள திருத்தச் சட்டம் தொடர்புடைய சிக்கல்கள் மற்றும் உள்ளடக்கம் குறித்தும் அதனால் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு விரிவான ஆலோசனைகள் நடத்தப்படுவது அவசியமாகும் எனவும் ஆசிய இணையத்தள கூட்டமைப்பின் நிர்வாக இயக்குநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய வரைவு இலங்கையின் டிஜிற்றல் பொருளாதாரத்தின் சாத்தியமான வளர்ச்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்தும். அதனால் இதற்கு விரிவான திருத்தங்களின் அவசியத்தையும் ஜெஃப் பெய்ன், வலியுறுத்தியுள்ளார்.

(அ)

# மாம்பழங்கள் உற்பத்தி அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 17

கடந்த வருடத்தில் மாம்பழ உற்பத்தி பாரியளவில் அதிகரித்துள்ளதாக விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் வரட்சியான காலநிலையை தொடர்ந்து பெய்த மழை காரணமாகவே மாம்பழ அறுவடை அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், கடந்த வாரம் விவசாயம் குறித்த விடயம் தொடர்பான கலந்துரையாடலின் போது, மா செய்கையினை மேலும் அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலின்போது மா செய்கையை நடளாவிய ரீதியாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியிருந்தார்.

அதேவேளை, மாம்பழ ஏற்றுமதியினை மேலும் விஸ்தரிப்பது குறித்தும் ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியாக வருடாந்த உற்பத்தி 25 கோடி என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் தற்போது அந்த எண்ணிக்கையினை விட கணிசமான அளவு அதிகரித்துள்ளதாக விவசாய திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக முன்னர் ரி.ஈ.ஜே.சி ரக மாம்பழங்கள் கிலோ ஒன்றின் விலை 800 ரூபாய் முதல் 1,000 ரூபாவாக சந்தையில் விற்கப்பட்டது.

ஆனால், தற்போது உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக 400 முதல் 500 ரூபாய் வரை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ)

# சிறுவனின் விரலை துண்டித்த சந்தேகநபர் விளக்கமறியலில்!

கொழும்பு, ஜன. 17

சிறுவன் ஒருவரை வாளால் தாக்கி விரலை துண்டித்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சம்பவம் இடம்பெற்று 11 நாட்களாக தலைமறைவாகியிருந்த நிலையில், நேற்று முன் தினம் பொலிஸில் சரணடைந்தார்.

இதனையடுத்து, அவர் வெலிசறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 4ஆம் திகதி இரண்டு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் மோதலாக மாறிய நிலையில், 14 வயதுடைய சிறுவனை, சந்தேகநபர் வாளால் தாக்கியுள்ளார்.

இதன்போது, சிறுவனின் இடது கையின் ஒரு விரல் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் காயமடைந்த குறித்த சிறுவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# யுக்திய சுற்றிவளைப்பு: மேலும் 877 பேர் கைது!

கொழும்பு, ஜன. 17

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' சுற்றிவளைப்பு நடவடிக்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 877 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த சந்தேக நபர்களிடமிருந்து 475 கிராம் ஹெரோயின், 501 கிராம் ஐஸ் போதைப்பொருள், 7 கிலோ 900 கிராம் கஞ்சா, 3,605 கஞ்சா செடிகள், 305 கிராம் மாவா, 126 மாத்திரைகள், 137 கிராம் மதன மோதகம் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 4 பேரிடம் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 14 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

*வீதியை புனரமைத்து தாருங்கள்!*

# நூதன முறையில் கோரிக்கையை முன்வைத்த மீசாலை மக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 17

தென்மராட்சி- கொடிகாமம் பகுதியில் உள்ள வீதி ஒன்றினை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை முன்வைத்துள்ள அப்பகுதி மக்கள், வீதி புனரமைப்பு பணிகளுக்கு செலவிடக் கோரி ஒரு தொகை பணத்தினையும் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மாகாண ஆளுநருக்கு கடிதமொன்றினையும் பிரதேச மக்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவின் ஜே/320 மற்றும் ஜே/321 ஆகிய கிராம சேவகர் பிரிவுக்கு நடுவே அமைந்துள்ள தட்டாங்குளம் பிள்ளையார் வீதியை மேற்குறித்த இரு கிராம சேவகர் பிரிவில் உள்ள மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் பிரதான வீதியாகும்.

பொதுமக்கள் பயணிக்கவே முடியாத நிலையில் பாரிய குழிகளுடன் இவ்வீதி காணப்படுகிறது. பாரிய குழிகள் காரணமாக அதிகளவான விபத்துக்களும் இடம்பெறுகின்றன.




இவ்வீதி கடந்த 18 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமலிருக்கும் குறித்த வீதியினை புனரமைத்துசெய்து தருமாறு உரிய அதிகாரிகளுக்கு பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம்.

இருப்பினும் இதுவரை எந்த விதமான புனரமைப்பும் செய்யப்படாமல் உள்ளது.

குறித்த வீதியை உடனடியாக புனரமைத்து தர வேண்டும் என்று கோரிக்கையினை முன்வைக்கின்றோம்.

இவ்வீதி புனரமைப்பிற்காக எமது பகுதியில் வசிக்கும் ஒவ்வொருவரிடமும் இருந்து ஒரு நாள் வேதனமான (ஆயிரம் ரூபாவை) சேகரித்து வங்கியூடாக சுமார் 96 ஆயிரம் ரூபாவினை காசோலையாக அனுப்பி வைத்துள்ளோம்.

அப்பணத்தினையும் புனரமைப்பு பணிகளுக்கான செலவு நிதியில் சேர்த்துக் கொள்வதோடு, வீதியின் புனரமைப்பு பணிகளை துரித கதியில் முன்னெடுக்குமாறு மீண்டும் கோரிக்கை முன்வைக்கின்றோம்" என தங்களது கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றினை மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும், குறித்த கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், சாவகச்சேரி பிரதேச செயலர், கொடிகாமம் பிரதேச சபை செயலாளர் உள்ளிட்டோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி

## தேசிய மக்கள் சக்தி திட்டவட்டம்



கொழும்பு, ஜன. 17

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் என நம்பகத்தன்மை வாய்ந்த கருத்துக் கணிப்புகள் மூலம் தெரிய வருவதாக அக்கட்சியின் செயற்குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளின் பிரகாரம் நாட்டில் உள்ள மொத்த வாக்காளர்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க விரும்புவதாக தெரிவித்துள்ளதாகவும் பிமல் ரத்நாயக்க கூறியுள்ளார்.

"நாட்டில் பெரும்பான்மையான மக்கள் ஆட்சிமாற்றத்தை விரும்பியுள்ளனர். கடந்தகால அரசாங்கங்களால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் மற்றும் கடுமையான பொருளாதார நெருக்கடி தொடர்பில் மக்கள் அதிருப்தியில் உள்ளனர்.

நாட்டின் அரசியல் தலைமையை மாற்றாமல், இலங்கைக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள முடியாது. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள பெரும்பான்மையான இலங்கையர்கள் தேசிய மக்கள் சக்தியின் வேலைத்திட்டத்தில் நம்பிக்கை அடைந்துள்ளனர்.

மக்கள் விரோத முகாம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவருடனும் தேசிய மக்கள் சக்திக்கு அரசியல் தொடர்புகள் கிடையாது. அதனால் மக்கள் எம்மீது முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளனர். நிச்சயமாக அடுத்த எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியே வெற்றி பெறும்.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் சில முக்கியமான நிறுவனங்கள் நடத்தியுள்ள கருத்துக்கணிப்புகள் ஊடாக தெரியவருகிறது" என்றும் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)

# அம்பாறை மாவட்டத்தில் விளைந்த வயல்கள் வெள்ளத்தினால் சேதம்!

அம்பாறை, ஜன. 17

**அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அதிகப்படியான விளைந்த வயல் நிலங்கள் பாரிய சேதத்தை எதிர்கொண்டுள்ளது.**



மாவட்டத்தில் கடந்த ஐந்து நாட்களாககால நிலை சீராக இருக்கிறது. வெயில் எறித்துவருகிறது. மக்கள் வழமையான நிலைமைக்கு மாறி வருகிறார்கள்.

பெரும்பாலான வீதிகளில் வெள்ளம் வடிந்து காணப்பட்டன இருந்த போதிலும் தாழ் நில பிரதேசங்களில் இன்னமும் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

பெரும்பாலான வயல் நிலங்களில் வெள்ளம் இன்னும் இருப்பதால் அது கைவிடப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றன.

இதனால் விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

இம்முறை விளைச்சல் மிகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு



அம்பாறை, ஜன. 17

ஏறாவூர் பற்று பிரதேச சபை செயலாளரின் வழிகாட்டலின் கீழ் செங்கலடி வர்த்தக சங்கம் மற்றும் சனசமூக நிலையங்கள் இணைந்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏறாவூர் பற்று பிரதேச மக்களுக்காக

செங்கலடி, பழையவூர், சேனைகுடியிருப்பு, ரமேஸ்புரம், ஜயன்கேணி, மிச்நகர், மீராகேணி, ஹிஸ்புல்லா நகர், தாமரை கேணி தக்வா பள்ளி வீதி, மயிலம்பாவெளி, விபுலானந்தபுரம் , ஆறுமுகத்தான்குடியிருப்பு கொம்மாதுறை, சித்தாண்டி போன்ற இடங்களில் சமைத்த உணவுகளை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டன. (அ)



# நாவிதன்வெளியில் மு.கா.வின் 9 மகளிர் கிளைகள் புனரமைப்பு

அம்பாரை, ஜன. 17

அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி பிரதேசத்தில் 09 கிராம சேவகர் பிரிவுகளுக்கான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மகளிர் கிளைகள் புனரமைப்புக் கூட்டம் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் என்.பி.நவாஸ் தலைமையில் நேற்று முன் தினம் மத்திய முகாம் பல்தேவைக் கட்டடத்தில் நடைபெற்றது.

இந்த கிளைகள் புனரமைப்புக் கூட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம். மன்சூர், கட்சியின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ.காதர், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, கட்சியின் மாவட்ட செயற்குழுவின் செயலாளரும், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், அரசியல் அதிஉயர் பீட உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச அமைப்பாளருமான ஏ.சீ.நிஸார் ஹாஜியார் மற்றும் நாவிதன்வெளி பிரதேசத்தின் 09 சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைக் குழுக்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர். (அ)

# அம்பாறையில் மக்கள் பிரச்னைகளை பிரதேச மட்டத்தில் தீர்க்க நடவடிக்கை

அம்பாறை, ஜன. 17

அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொலிஸ் உபதேச குழுக்களை ஒன்றிணைத்து ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கலந்துரையாடல் கெப்சோ அமைப்பின் ஏற்பாட்டில் அம்பாறையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே. எச்.எம்.என்.ஜயபத்ம தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின்போது, நிகழ்வின் பங்காள அமைப்பான கெப்சோ நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளரும், உபதேசக் குழுவின் தவிசாளருமான ஏ.ஜே.காமில் இம்டாட், பொலிஸ் உயரதிகாரிகள், அம்பாறை மாவட்டத்தில் செயற்பட்டு வரும் பொலிஸ் உபதேசக் குழுக்களின் பிரதிநிதிகள், சமூகப் பொலிஸ் சேவைப் பிரிவின் பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இவ்வருடத்தின் முதலாவது விசேட மாவட்ட குழு கூட்டத்தின் போது அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள திட்ட முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டதுடன், பொலிஸாரும் பொது மக்களும்



இணைந்து இம்மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 23 பொலிஸ் நிலையங்களின் கீழ் செயற்பட்டு வரும் உபதேசக் குழுக்கள் மற்றும் பொலிஸார் போன்றோர் இணைந்து பிரதேச ரீதியாக காணப்படும் பிரச்னைகள் மற்றும் தேவைகள் போன்றவற்றைக் கண்டறிந்து சிறந்த சமுதாயத்தினைக் கட்டியெழுப்பும் வகையிலான வேலைத்திட்டத்தினையும் நடைமுறைப் படுத்துதல் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

இதன்போது அம்பறை மாவட்டத்தில் உள்ள தீய பழக்கவழக்க செயற்பாட்டாளர்களை சீர்திருத்துதல், மக்கள் பிரச்னைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கான செயன்முறையனை மேற்கொள்ளல், மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான வழி வகைகளை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே. எச்.எம்.என்.ஜயபத்ம சுட்டிக் காட்டியதுடன் இதற்கென அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். (அ)

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள 2800 குடும்பங்களுக்கு உணவுப் பொதி

அம்பாறை, ஜன. 17

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அட்டாளச்சேனை பிரதேச செயலத்துக்குட்பட்ட 2800 குடும்பங்களுக்கு சமைத்த உணவுப் பொதிகளை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளச்சேனை அமைப்பாளரும், தொழிலதிபருமான ஏ.கே.அமீர் தலைமையில் நேற்று முன் தினம் வழங்க்கப்பட்டது.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உயர்பீட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், கட்சி தொண்டர்கள் உள்ளிட்டு பலர் இப்பணியில் ஈடுபட்டு இந்த சமைத்த உணவுப் பொதிகளை



# வெள்ளத்தில் நின்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு




காரைதீவு, ஜன. 17

காரைதீவு பிரதேசத்தில் மிகவும் தாழ்நிலை பகுதியில் இருக்கும் குளவெளி வீடமைப்பு தொகுதியிலுள்ள வெள்ளப்பாதிப்பு மக்களுக்கு ஒஸ்கார் அமைப்பு நேற்று ஒரு தொகுதி சமைத்த உணவை வழங்கியது.

அவுஸ்திரேலியாவில் வாழும் காரைதீவைச்சேர்ந்த சமூக ஆர்வலர்களின் நிதி உதவியைக் கொண்டு காரைதீவு இளைஞர்கள் அந்த மனிதாபிமான பணியில் ஈடுபட்டார்கள்.

ஒஸ்கார் சார்பில் சமூக செயற்பாட்டாளர் கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா கலந்துகொண்டு அதனை வழங்கினார். (அ)

# இந்தியா-பங்களாதேஷ் எல்லை நகரை மியன்மார் ஆயுதக் குழு கைப்பற்றியது!

டாக்கா, ஜன. 17

**மியன்மாரில் ஆயுதமேந்திய இனக்குழு ஒன்று இந்தியா மற்றும் பங்களாதேஷ் எல்லையில் அமைந்துள்ள ஒரு நகரத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.**



மியான்மர் பல முனைகளில் கிளர்ச்சியில் உள்ளது, அங்கு ஜனநாயக சார்பு இணை அர சாங்கத்தால் ஆதரிக்கப்படும் இராணுவ எதிர்ப்பு குழுக்கள் பல இராணுவ நிலைகள் மற்றும் நகரங்களின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியுள்ளன.

2021 இல் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசாங்கத்திற்கு எதிராக ஆட்சிக்கவிழ்ப்பு நடத்தியதில் இருந்து இராணுவ ஆட்சி எதிர் கொள்ளும் மிகப்பெரிய சவாலா இது உள்ளது.

அரக்கான் இராணுவம் என்று அழைக்கப்படும் குழு, ஞாயிற்றுக்கிழமை இரவு, அண்டை நாடுகளுடன் வர்த்த கம் செய்வதற்கு முக்கியமாக இருக்கும் கலடன் ஆற்றின் துறைமுக நகரமான பலேத்வா வைக் கைப்பற்றியதாகக் கூறி யது.

"எல்லை ஸ்திரத்தன்மை பிரச்சினைகள் தொடர்பாக, அண்டை நாடுகளுடன் நாங் கள் சிறந்த முறையில் ஒத்துழைப் போம்" என்று ஆயுதமேந்திய இனக்குழுவின் செய்தித் தொடர் பாளர் கூறியுள்ளதாக ரொய்ட் டர்ஸ் தெரிவித்துள்ளது.

எனினும் அப்பகுதியில் நிர் வாகத்தையும் சட்ட அமலாக் கத்தையும் அவர்கள் கையகப்ப டுத்துவார்கள் என்றும் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். (அ)

# டில்லியில் 3ஆவது நாளாக தொடர்கிறது குளிர் அலை

## 160 இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் பாதிப்பு

புதுடில்லி, ஜன. 17

கடும் குளிர் காரணமாக மூன் றாவது நாளாகவும் நேற்று செவ் வாய்க்கிழமை வட இந்தியா வின் பெரும்பாலான பகுதிகளை அடர்ந்த மூடுபனி சூழ்ந்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது.

மூடு பனி நிலைமை விமான சேவையை மாத்திரமன்றி, ரயில் போக்குவரத்தினையும் பாதித் தது, இதனால் ஆயிரக்கணக்கான பயணிகள் விமான நிலையம் மற்றும் ரயில் நிலையங்களில் மணிக்கணக்கில் காத்திருந்தனர்.

டெல்லியில் செவ்வாய்க்கி ழமை கடும் பனிமூட்டம் நிலவி யதால், குளிர் அலை நிலை நீடித் தது. இந்திய வானிலை ஆய்வு நிலையத்தில் கூற்றுப்படி தலை நகரின் சப்தர்ஜங்கில் வெப்ப நிலை 4.8 பாகை செல்சியஸ ாகவும், பாலத்தில் வெப்பநிலை 7.2 பாகை செல்சியஸாகவும் பதிவானது.

இன்றைய தினம் மாத்திரம் மூடு பனி நிலை காரணமாக டில்லியில் இருந்து புறப்படும் சுமார் 30 விமானங்கள் தாமதம் அடைந்தன. மேலும் 17 விமா னங்கள் இரத்து செய்யப்பட்ட தாக இந்திய விமான நிலைய ஆதாரங்களை மேற்கோள் காட்டி ஏ.என்.ஐ செய்தி நிறுவ னம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், சுமார் 30 ரயில் களும் நேற்று தாமதமாக டில் லியை சென்றடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மூன்று நாட்களாக சுமார் 160 இற்கும் மேற்பட்ட விமான பயணங்களுக்கு இடை யூறு ஏற்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

தலைநகரான புதுடில்லி விமான நிலையத்திலிருந்து 128 விமானங்கள் தாமதத்தை எதிர் கொண்டதாகவும் 33 விமானங் கள் இரத்து செய்யப்பட்டதாக வும் இந்திய விமானப் போக்கு வரத்து தளம் சுட்டிக்காட்டியுள் ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ளும் சிங்கப்பூர் ஜனாதிபதி

## புருணைக்கு செல்கிறார்



சிங்கப்பூர்சிற்றி, ஜன. 17

தர்மன் சண்முகரத்னம் சிங்கப்பூர் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதல் உத்தியோகபூர்வ விஜயமாக எதிர்வரும் 24 ஆம் திகதி புருணை செல்லவுள்ளது டன் அங்கு 26ஆம் திகதி வரை தங்கியிருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புருணை சுல்தான் ஹசனல் போல்கியாவின் அழைப்பின் பேரில் திரு தர்மன் அங்கு விஜயம் செய்ய உள்ளார்.

சிங்கப்பூர் மற்றும் புருணை நாடுகளுக்கு இடையில் ராஜந்திர உறவுகள் ஏற்பட்டு நேற்று முன் தினம் 40 ஆண்டுகள் பூர்த்தியாகியுள் ளது.

புருணை அரச மாளிகையில் ஜனாதிபதி தர்மனுக்கு உத்தியோ பூர்வ வரவேற்பு வழங்கப்பட உள்ளதுடன் அந்நாட்டு மன்னருடன் இருதரப்பு சந்திப்பிலும் அவர் கலந்துகொள்ள உள்ளார்.

சிங்கப்பூர் ஜனாதிபதியுடன் அவரது மனைவி திருமதி ஜேன் இட்டோகி சண்முகரத்னம், சிங்கப்பூர் தேசிய வளர்ச்சி அமைச்சர் டெஸ்மண்ட் லீ, பிரதமர் அலுவலக அமைச்சரும், இரண்டாம் வெளி யுறவு அமைச்சருமான மாலிக்கி ஒஸ்மான், கல்வி இணையமைச்சர் கான் சியாவ் ஹூவாங், பாராளுமன்ற உறுப்பினர்கள் மரியம் ஜாஃ பர், ஸூல்கர்னைன் அப்துல் ரஹீம் ஆகியோரும் இந்த விஜயத்தில் இடம்பெற்றுள்ளனர்.

சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னம், இலங்கையின் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்டவர் என்பது குறிப்பிடத்தக் கது. (அ)

# 2024 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் விலகலை அறிவித்த விவேக் ராமசாமி!

நியூயோர்க், ஜன. 17

2024 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுவதாக இந்திய வம்சாவ ளியைச் சேர்ந்த விவேக் ராம சாமி அறிவித்துள்ளார்.

குடியரசுக் கட்சியின் வேட் பாளரை தேர்வு செய்ய நடந்த அயோவா மாகாண தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவைத் தொடர்ந்தே ஜனாதிபதி தேர்த லில் இருந்து விலகுவதாக விவேக் ராமசாரி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

"நான் இன்றிரவு இந்த உண் மையை ஏற்றுக் கொள்கிறேன். இது கடுமையாகவே இருக்கி றது. ஆனாலும் ஏற்கிறேன். இன்று மக்களை ஆச்சரியப்ப டுத்தும் முடிவை எதிர்பார்த் தோம். அது கிட்டவில்லை" என தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர் தல் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ளது.

இதில் குடியரசு கட்சி ஜனா திபதி வேட்பாளர் தேர்வில் முன்னாள் ஜனாதிபதி டிரம்ப், நிக்கி ஹாலே, இந்திய வம்சா வளியை சேர்ந்த விவேக் ராம சாமி உள்ளிட்டோர் களத்தில்



உள்ளனர்.

குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்யும் காகஸ் என்ற மாகாண அளவிலான உள்கட்சி தேர்தல் தொடங்கியது. இத்தேர்தல் பாரம்பரியமாக அயோவா மாகாணத்தில் இருந்து தொடங் கப்பட்டது. நேற்று நடந்த இத் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற் றார்.

51.9 சதவீத வாக்குகளுடன் டொனால்ட் டிரம்ப் முன்னிலை வகிக்கிறார். புளோரிடா ஆளு நர் ரான் டேசாண்டிஸ் 20.7 சதவீத வாக்குகளுடன் இரண் டாம் இடத்திலும், தெற்கு கரோ லினா ஆளுநர் நிக்கி ஹேலி 19 சதவீத வாக்குகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளனர்.

தொடர்ந்து விவேக் ராமசாமி 7.7 சதவீத வாக்குகளும், அர் கான்ஸஸ் முன்னாள் ஆளுநர் அஸா ஹட்ஷின்சன் 0.2 சதவீத வாக்குகளும் பெற்றுள்ளனர்.

இத்தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவை தொடர்ந்தே அமெரிக்க ஜனாதிபதி தேர்த லுக்கான போட்டியில் இருந்து விலகுவதாக விவேக் ராமசாமி அறிவித்துள்ளார்.

ஐயோவா மாகாண உட் கட்சி தேர்தலில் தோல்வி அடைந்த நிலையில், இந்த அறிவிப்பை விவேக் ராமசாமி வெளியிட்டுள்ளார். மேலும் ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் டிரம்பிற்கு ஆத ரவு தருவதாகவும் அறிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிரியா மற்றும் ஈராக் மீது தாக்குதல் நடத்திய ஈரான்

## குர்திஸ்தான் போராளிகள் இலக்கு

தெஹ்ரான், ஜன. 17

சிரியா மற்றும் ஈராக் மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது. அதேவேளை ஈராக் கட்டுப்பாட் டில் உள்ள குர்திஸ்தான் பகுதி யில் போராளிகளை குறிவைத்து சிரியா ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேலிய புலனாய்வுக் குழுக்களை தாக்கியதாக ஈரான் தெரிவித்துள்ளது. இந்த தாக்கு தல்களில் பேராளிகளின் தலை மையகம் அழிக்கப்பட்டதாக ஈரான் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்பு படையினர் தெரி வித்துள்ளனர்.

இந்த தாக்குதலில் நான்கு பொதுமக்கள் உயிரிழந்துள்ள துடன் மேலும் 6 பேர் பலத்த காயம் அடைந்துள்ளதாக கூறப் படுகிறது.

தமது பிரதேசத்தில் நடத் தப்பட்ட தாக்குதலில் கொல் லப்பட்ட பல பொதுமக்களில் பிரபல தொழிலதிபர் பெஷ்ரா திசாய் அடங்குவதாக குர்திஸ் தான் ஜனநாயகக் கட்சி தெரி வித்துள்ளது.

ஈரான், சிரியாவின் கட்டுப் பாட்டில் உள்ள குர்திஸ்தானின் பல பகுதிகளை பாலிஸ்டிக் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது.

குர்திஸ்தான் இஸ்லாமிய அரசு போராளி குழுவின் தளப திகளுக்கு சொந்தமான இடங் களை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குர்திஸ்தான் போராளிகள்



அண்மையில் ஈரானில் கெர்மன் மற்றும் ராஸ்க் உள்ளிட்ட இடங் களில் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டனர். இந்த தாக் குதலுக்கு பதிலடியாக ஈரான், சிரியாவின் கட்டுப்பாட்டில் உள்ள குர்திஸ்தான் பகுதிகள் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது. (அ)

# யார் என்னதான் சொன்னாலும் யுக்திய ஒப்பரேசன் தொடரும்!

## அமைச்சர் டிரான் அலஸ் உறுதி



கொழும்பு, ஜன. 17

"ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அல்ல யார் என்ன சொன்னாலும் யுக்திய ஒப்பரேஷன் நிறுத்தப்படமாட்டாது. அது தொடர்ந்து முன்னெடுக்கப்படும்." _ என்று சூளுரைத்துள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுக்திய ஒப்பரேஷனுக்கு எதிராக தேசிய ரீதியிலும், சர்வதேச மட்டத்திலும் எதிர்ப்புகள் வந்துள்ளன. இலங்கையில் உள்ள சிறு குழுவொன்று இதற்கு எதிராக சர்வதேசத்துக்கு எழுதுகின்றது. இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள்பேரவைக் கூட, எதிர்ப்பு வெளியிட்டிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கை தொடர்பில் ஊடகங்கள் என்னிடம் வினவின, இதன்போது யார் என்ன சொன்னாலும் இந்த நடவடிக்கை நிறுத்தப்படாது, தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என தெளிவாக குறிப்பிட்டேன். இந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றோம்.

அதேபோல எமது நாட்டில் உள்ள சில சட்டத்தரணிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய செயற்படுகின்றன. எமது பதில் பொலிஸ்மா அதிபர், பொலிஸ்மா அதிபராக வருவதை தடுப்பதற்கு நீதிமன்றத்தை நாடியுள்ளனர். யுக்திய நடவடிக்கையை நிறுத்துவதே இதன் நோக்கமாகும்- என்றார். (அ)

# இலகு ரயில் திட்டத்தை மீளத் தொடங்க இலங்கைக்கு ஜப்பான் கடும் நிபந்தனை

## ஏற்பட்ட செலவுகளை மீள செலுத்த வேண்டுமெனவும் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 17

1.5 பில்லியன் டொலர்கள் ஜப்பானின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட இலகு ரயில் திட்டத்தை நிறுத்தியமைக்கான செலவுகளை ஈடுசெய்யுமாறு இலங்கையிடம் ஜப்பான் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜப்பான் நிதியமைச்சர் சுசுகி ஷுனிச்சி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தூதுக் குழுவினருடன் நடத்திய சந்திப்பில் இதனை வலியுறுத்தியுள்ளார்.

நிறுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்குவதற்கு செலவுகளை மீள செலுத்துவது அவசியம் என்றும் ஜப்பான் நிதி அமைச்சர் இதன்போது எதிர்க்கட்சித் தலைவரிடம் வலியுறுத்தியதாக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த 11, 12ஆம் திகதிகளில் ஜப்பான் நிதி அமைச்சர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த போதே எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# போதைப்பொருளுக்கு அடிமையான கிராம அலுவலர் உட்பட இருவர் கைது!

முல்லைத்தீவு, ஜன. 17

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடமையாற்றி வருகின்ற கிராம அலுவலர் ஒருவர் உள்ளிட்ட இரண்டு நபர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கிராம அலுவலர் தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினர்களுக்கும் போதைப்பொருட்களை வியாபாரம் செய்து வந்தார் என மக்களால் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் மூலம் அறிவிக்கப்பட்டது.

குறிப்பாக குறித்த கிராம அலுவலர் ஹெரோயின் ஐஸ் உள்ளிட்ட பல்வேறு போதைப் பொருட்களை பல இளைஞர்கள் ஊடாக பல்வேறு தரப்பினருக்கும் விற்பனை செய்து வருவதோடு, அவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக இருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் போதைப்பொருளுக்கு அடி மையான கிராம அலுவலரையும், அவருடன் இணைந்து குறித்த செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த மேலும் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டபோது குறித்த நபர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகியிருந்தமை அறியப்பட்ட நிலைமையில், குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (அ)

# பாடசாலையை உடைத்து ரி.வி. திருடியவர் சிக்கினார்

வவுனியா, ஜன. 17

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பிரமண்டு வித்தியாலயத்தில் திறன் வகுப்பறையின் பூட்டு உடைக்கப்பட்டு தொலைக்காட்சி களவாடப்பட்டமை தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் முறைப்பாடுசெய்து 8 மணி நேரத்துக்குள் கைது செய்துள்ளனர்.

பாடசாலையில் இடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் பாடசாலை அதிபர் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் உப பொலிஸ் பரிசோதகர் அகமட் தலைமையில் பொலிஸ் சார்ஜன்டுகளான திசாநாயக்க, ஜெயவர்த்தன, திலீப் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான உபாலி, தயாளன், ரணில் ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினரினால் விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

பாடசாலைக்கு அருகேயுள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. காணொளிகளையும் பொலிஸார் பரிசோதனைக்குட்படுத்தினர். இதன்போது கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 3.29 மணியளவில் ஒருவர் தொலைக்காட்சியைத் தூக்கிக் செல்வது சி.சி.ரி.வியில் பதிவாகியிருந்தது.

சி.சி.ரி.வி. காட்சியின் உதவியுடன் தொடர்ச்சியாக விசாரணைகளை முன்னெடுத்த சமயத்தில் இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றில் குறித்த தொலைக்காட்சியை விற்பனைக்கு வழங்கியமை தெரியவந்ததையடுத்து, சுமார் 8 மணி நேரத்தில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுட்ட நபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவர். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# உயர்தர வினாத்தாள் வெளியாகியமை; மற்றொருவர் மொறட்டுவையில் கைது!

கொழும்பு, ஜன. 17

இந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சைக்கான விவசாய வினாத்தாளை குறித்த பாடப் பரீட்சை இடம்பெறுவதற்கு முன்னரே சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட சம்பவம் தொடர்பில் மொறட்டுவை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் அலுவலக உதவியாளர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொறட்டுவையில் உள்ள பாடசாலை ஒன்றில் அலுவலக உதவியாளராக பணியாற்றிய 38 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விவசாய வினாத்தாள்களை மாணவர் ஒருவருக்கு பணத்துக்காக விற்பனை செய்துள்ளதாக பொலிஸார் கண்டறிந்துள்ளனர். (அ)

# மின்சாரம் தாக்கி மாணவன் பலி

கொழும்பு, ஜன. 17

மாத்தளை - ரத்தோட்டை, கம்மடுவ பிரதேசத்தில் மாணவர் ஒருவர் மின்சாரம் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மாத்தளை - கம்மடுவ பிரதேசத்தை சேர்ந்த 16 வயது மாணவனாவார்.

இவர் பாடசாலையில் உள்ள இளநீர் மரத்தில் இளநீர் பறிப்பதற்காக ஏறியுள்ளார்.

இந்நிலையில் இளநீரை இலகுவாக பறிப்பதற்காக மற்றொரு மாணவன் மூங்கில் மரக்கிளை ஒன்றை குறித்த மாணவனிடம் கொடுத்துள்ளார்.

குறித்த மூங்கில் மரக்கிளை அருகில் இருந்த மின் கம்பத்தில் பட்டதில் மரத்தில் இருந்த மாணவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக கம்மடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# மின்சாரம் தாக்கி ஆசிரியர் மரணம்

கொழும்பு, ஜன. 17

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாமஸ்டன் தோட்டத்தில், மின்சாரம் தாக்கி ஆசிரியர் ஒருவர் நேற்று காலை பலியாகியுள்ளார்.

பாமஸ்டன் தமிழ் வித்தியாலயத்தில் சேவையாற்றும் இரு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை அவர் தனது வீட்டு தோட்டத்துக்கு சென்றுள்ளார். தோட்டத்திற்கு பாதுகாப்பு வேலி மற்றும் நீர் பாய்ச்சுவதற்காக பொருத்தப்பட்டிருந்த மின் இணைப்பில் ஏற்பட்டிருந்த கசிவினை அவதானிக்காது, கால் வைத்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ)

# முல்லைத்தீவில் பஸ்ஸுடன் மோ.சைக்கிள் மோதி விபத்து

முல்லைத்தீவு, ஜன. 17

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ.போ.ச பஸ் சிலாவத்தை நோக்கி பயணித்த போது அதே திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் இ.போ.ச பஸ்ஸுடன் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கள்ளப்பாடு பகுதியை சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இ.போ.ச பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## பெப்ரவரிக்கு பின்...

பெப்ரவரி மாதத்தின் பின்னர் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நட்பு நாடுகளுடன் இணைந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாகவும், அதனை சீர்குலைக்க சில தரப்பினர் மேற்கொள்ளும் முயற்சிகளை இனங்கண்டு தோற்கடிக்கவேண்டிய பொறுப்பு மக்களுக்கு உள்ளது எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையைப் போன்று சுமார் 75 அரசியல் கட்சிகள் இருக்கும் நாடு உலகில் வேறு எங்கும் இல்லை. அதனால் நம் நாட்டில் பிளவுகள் உருவாகியுள்ளன. இது நாட்டில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலை சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டில் பல அழிவுகளுக்கும் வழிவகுத்தது. இந்த கட்சிகளுக்கு எப்படி பணம் கிடைக்கிறது? யார் செலவு செய்கிறார்கள் என்பதை கண்காணிக்க எந்த முறைமையும் இல்லை. எனவே இந்தக் கட்சிகள் எவ்வாறு தேர்தலில் பணத்தை செலவிடுகின்றன என்பதை கண்டறியக் கூடிய சட்டமூலத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தற்போது உலகின் கவனத்தை ஈர்த்துள்ளார். அதற்குக் காரணம், அதல பாதாளத்திற்குச் சென்ற நாட்டை சுமார் ஒரு வருடமும் ஆறு மாதங்களில் மீண்டும் அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு சென்றமையால் ஆகும். ஜனாதிபதி ஒவ்வொரு வெளி நாட்டு பயணத்தையும் அந்த நோக்கத் திற்காக திறம்பட பயன்படுத்தினார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அத்துடன் 2020ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்ட எமது கட்சியின் விஞ்ஞாபனம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது என்றே கூற வேண்டும். அப்படியானால், அவர்கள் தோற்கடித்த விஞ்ஞாபனத்தை நடை முறைப்படுத்துவதன் மூலம் எரிபொருள், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை தட்டுப் பாடின்றி அனுபவிக்கின்றார்கள் என்பதை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும். அந்த ஆவணத்தால்தான் இன்று நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இனி ஒருவரையொருவர் விமர்சிப்பதில் அர்த்தமில்லை. வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை தவிர வேறு மாற்று வழியில்லை. அந்தத் திட்டத்தால் இன்று மக்கள் வரிசையில் நிற்காமல் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். எனவே, இதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். இந்தப் பயணத்தை யாரேனும் மாற்றினால் அதற்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும். அரசியல் இலாபங்களுக்காக சில சந்தர்ப்பங்களில் வெளியிடப்பட்ட சில பொய்யான அறிக்கைகளுக்கு அதனை முன்வைத்த அந்தக் கட்சிகளே பொறுப்பேற்க வேண்டும்.

2022ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் பொறுப்பேற்ற போது, இந்த நாட்டில் அரசியல் செய்யும் திறமை எவருக்கும் இருக்கவில்லை. எந்த ஒரு அபிவிருத்திப் பணியையும் செய்ய யாருக்கும் பலம் இல்லை. மூன்று வருடங்களாக தடைப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்க முடிந்துள்ளது.

ஆனால் சில கட்சிகள் இந்நாட்டின் அபிவிருத்திப் போக்கை சீர்குலைக்க முயற்சிக்கின்றன. அந்த குழுவினர் இந்த நாட்களில் வேலைநிறுத்த அலைகளை ஆரம்பித்துள்ளனர். இதை உலகம் முழுவதும் பரப்பி, இங்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை குறைக்க முயற்சி செய்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க முயற்சிக்கலாம். அதன் மூலம் எமது நாட்டுக்கு பல பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

மேலும், கடன் மறுசீரமைப்புக்காக, ஜப்பான் மற்றும் பாரிஸ் கிளப்புடன் ஒரு ஒப்பந்தமும், சீனாவுடன் மற்றொரு ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட உள்ளது. அதன் மூலம், பெப்ரவரி மாதத்திற்குப் பிறகு, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெய்கா நிறுவனம் மற்றும் நட்பு நாடுகளின் ஆதரவுடன் நாட்டை முன்னேற்றுவதற்கான வாய்ப்பு ஏற்படும். அதை சீர்குலைக்க சில கட்சிகள் முயற்சி செய்யலாம். இவ்வாறான முயற்சிகளை இனங்கண்டு முறியடிக்க வேண்டியது மக்களின் பொறுப்பு-என்றார். (அ)

## சஜித்...

அண்மைக்காலமாக ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அரசியல் செயற்பாடுகளின் போது ஜீ.எல். பீரிஸ் மற்றும் பொருளாதார விவகாரங்களில் கலாநிதி நாலக கொடஹேவா போன்றோரின் ஆலோசனைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் வகையில் சஜித் பிரேமதாஸவிடம் அவர்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளனர்.

அதன் காரணமாக கபீர் ஹாசிம், கலாநிதி ஹர்ஷ டி சில்வா, இரான் விக்கிரமரத்ன உள்ளிட்ட முக்கிய அரசியல்வாதிகள் பலரும் கடும் அதிருப்திக்கு உள்ளாகி இருப்பதாக கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே மொட்டுக்கட்சி முக்கியஸ்தர்களை இணைத்துக் கொண்டு அவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்குப் பதில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதே கட்சியின் எதிர்கால நலனுக்கு நன்மை பயக்கும் என்று பலரும் பகிரங்கமாக விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளனர். (அ)

## வாழ்வதற்கு...

ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டு வாழ்வதற்கு வழியில்லாதுள்ளனர்.

அதன் காரணமாக இத்தருணத்தில் மக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்பவே நாம் செயலாற்ற வேண்டும். மக்களுக்கான கடமைகளையும் பொறுப்புக்களையும் அரசாங்கம் புறக்கணித்துள்ளது." என்றும் பேராயர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

## பேச்சு...

ரமேஷ் பத்திரன ஆகியோருடன் தமது கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இந்த சந்திப்புக்கு பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய தொழிற்சங்க பிரதிநிதிகள், பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததால் இன்று காலை 6.30 மணி வரை பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் தொடரும் என்று தெரிவித்தனர்.

வைத்தியர்கள் நீங்கலாக 72 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் இன்று காலை 06.30 மணிக்கு 24 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

வைத்தியர்களுக்கான சேவைக்கால இடையூறு, வருகை மற்றும் போக்கு வரத்து கொடுப்பனவை 35,000 ரூபாவினால் அதிகரிக்கவுள்ளதாக நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அண்மை யில் அமைச்சரவைக்கு அறிவித்திருந்தார்.

இந்த தீர்மானத்திற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன், குறித்த கொடுப்பனவு தமக்கும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி பல சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## யாழ்.சிறை...

தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தினால் யாழ். மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தில் கலந்துகொண்ட நீதி அமைச்சர் யாழ்ப்பாண சிறைச் சாலைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். கண்காணிப்பு விஜயத்துக்கு பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஒரு சில சிறைச்சாலை அதிகாரிகள் போதைப்பொருள் வியாபாரத்துடன் தொடர்பு இருப்பதாக பாரிய குற்றச்சாட்டு இருந்து வருகிறது. யுக்திய போதைப் பொருள் ஒழிப்பு வேலைத்திட்டத்தின்போது சிறைச்சாலை அதிகாரிகள் சிலர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இது மிகவும் கவலைக்குரிய நிலைமையாகும். என்றாலும் யாழ்ப்பாண சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அவ்வாறான குற்றச்சாட்டு எதுவும் இல்லை என கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அதனை மதிக்கிறோம்.

அத்துடன் எமது நாட்டில் ஏனைய சிறைச்சாலைகளைவிட மிகவும் சுத்தமாக சிறைச்சாலை வளாகத்தை வைத்திருப்பதற்கு இங்குள்ள சிறைச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர். இது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

முன்மாதிரியான நிறுவனமாக யாழ்ப்பாண சிறைச்சாலையை அறிமுகப்படுத்தலாம். இது தொடர்பாக சிறைச்சாலை நிர்வாகத்தினருக்கு நன்றி தெரிவிப்பதுடன் யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு தேவையான குறைபாடுகளை பூரணப்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன்-என்றார். (அ)

## இலங்கையின்...

நன்மைகளை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சுவிஸ் - ஆசிய வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சுவிஸ்சர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்ற "பசுமை தொழில்நுட்ப மன்றத்தில்" கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

காலநிலை மாற்றத்தைத் தணிக்க உலகளாவிய நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. இதற்காக பல்வேறு அர்ப்பணிப்பு களைச் செய்த பல உலகளாவிய மன்றங்கள் உள்ளன. இருப்பினும், இதற்காக அர்ப்பணிப்பதை விட செயற்படுவது குறைந்த மட்டத்தில் உள்ளது என்று சொல்ல வேண்டும்.

பொதுவான காலத்தை விட வறட்சி, நீண்ட காலம் நீடிப்பது விவசாய உற்பத்திக்கு இடையூறு விளைவிக்கும் போது நமது உணவு பாதுகாப்பு ஆபத்தில் தள்ளப்படுகிறது.

மேலும், தாமதமான பருவமழை காரணமாக நீர்மின் உற்பத்தி தடைப்படும்போது நமது எரிசக்தி பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது.

வறட்சியின் நிறைவில் வெள்ளம் நிலைமை ஏற்படுகிறது. குறிப்பாக, சாதாரண மக்களின் வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் சீர்குலைக்கிறது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதகமான விளைவுகள் அசாதாரணமானது என்பது இதிலிருந்து மிகத் தெளிவாகத் தெரிகிறது.

காலநிலை நீதி தொடர்பான பிரச்னையைப் போன்று அதனை தணிக்கவும் பூகோள தெற்கின் நாடுகளுக்கு மேம்பட்ட பொருளாதாரங்களின் வலுவான பங்களிப்பின் அவசியத்தையும் இது காட்டுகிறது.-என்றார். (அ)

## மயிலத்தமடு...

ஆதீனத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை யின் முன்னாள் உறுப்பினர்கள், சைவ மகா சபையினர், மத தலைவர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களால் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபெரும் கவயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## நாட்டில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார சேவையே இந்நேரத்தில் நாட்டுக்குத் முக்கியமான தேவையாக இருந்தாலும், ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு ஒதுக்கீடு களே வழங்க அனுமதியளிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வாறு போதாது எனக் கூறும் அரசாங்கத்திடம் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளுக்கும் போதாதது எனக் கூறுகிறோம். பலவீனமான தலைமைத்துவத்தினாலயே சுகாதார சேவை முடங்கியுள்ளது.

நாட்டின் சுகாதார சேவை முடங்கிக் கிடக்கும் இந்நேரத்தில் நாட்டின் தலைவர் வெளிநாடுகளுக்குச் சென்று விநோதங்களில் ஈடுபடுவது நியாயமில்லை-என்றார். (அ)

## விவசாய...

பகுதியை பரீட்சைகள் திணைக்களம் இரத்து செய்வதாக ஜனவரி 12 ஆம் திகதி அன்று அறிவித்திருந்தது.

குறித்த வினாத்தாளின் சில வினாக்கள் பரீட்சைக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பப்பட்டதாக வெளியான தகவலை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்திருந்தார்.

அதற்கமைய, விவசாய விஞ்ஞான பாடத்திற்கான II ஆம் பகுதி வினாத்தாளை இரத்து செய்து, மீண்டும் அப் பரீட்சைக்கான பகுதியை நடத்த பரீட்சைகள் திணைக்களம் முடிவு செய்தது.

இந்த சம்பவம் தொடர்பில் ஆசிரியர் ஒருவரும் ,அலுவலக உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந் நிலையில், சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணைகளில் விவசாய விஞ்ஞான பாடத்தின் முதலாம் வினாத்தாளில் இருந்தும் பல கேள்விகள் கசிந்துள்ளமை தற்போது தெரியவந்துள்ளதாக இலங்கை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிணங்க, இரண்டு வினாத்தாள்களும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டு புதிய பரீட்சை திகதியும் நேரமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, விவசாய விஞ்ஞான பாடத்திற்கான ஐஐ பகுதி எதிர்வரும் பெப்வரி 01 ஆம் திகதி காலை 08.30 மணி தொடக்கம் முற்பகல் 11.40 மணிவரை நடைபெறும்.

விவசாய விஞ்ஞான பாடத்திற்கான ஐ பகுதி அன்றைய தினம் பிற்பகல் 01.00 மணி தொடக்கம் பிற்பகல் 03.00 மணி வரை நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கான பாடசாலை விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டை அந்தந்த பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அதேவேளை தனியார் விண்ணப்பதாரர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்படும் என்றும் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் மேலும் கூறியுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# ஏதாவது ஒரு வழியில் ஆட்சியைப் பிடிப்போம்

## அநுரகுமார பகிரங்கம்

கொழும்பு, ஜன. 17

ஏதாவது ஓர் வழியில் இந்த ஆண்டில் ஆட்சி கைப்பற்றப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய மோசமான ஆட்சியை தோற்கடித்து ஏதாவது வழியில் ஆட்சியை பெற்றுக்கொள்ள தயார்.

மக்களை நெருக்கடியில் ஆழ்த்திய ஆட்சியாளர்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையிலான தீர்க்கமான ஓர் போர் நடைபெறுகின்றது.

மக்கள் இந்தப் போரிலிருந்து பின்வாங்கக் கூடாது. நிச்சயமாக இந்த போரை வெற்றிகொள்வோம்.

ஹம்பாந்தோட்டையில் மகிந்த ராஜபக்ஷ பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டார். துறைமுகம் அமைத்தார் கப்பல் இல்லை, மைதானம் அமைத்தார் போட்டிகள் இல்லை.

சிறைச்சாலை அமைத்தார் அது நிரம்பியுள்ளது. இந்தக் கள்வர் கூட்டம் பயன்படுத்தும் வாகனங்கள் நாட்டுக்கு தாக்கு பிடிக்கக் கூடியதல்ல.

இவர்களின் வாகனங்கள் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு இரண்டு மூன்று கிலோமீற்றர் மட்டுமே பயணிக்கக் கூடியவை.

ரணிலின் வாகனம் 3000 லட்சம் ரூபா பெறுமதியானது. இந்த கள்வர் கூட்டத்தை விரட்டியடிப்போம். நேரடியாக கூறினால் நாம் ஆட்சியை கைப்பற்றுவோம்- என்றார். (அ)

# மலர் வளையம், உருவ பொம்மையுடன் வீதிக்கு இறங்கிய போராட்டக்காரர்கள்

## கெஹலியவுக்கு வலுக்கும் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 17

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கெஹலியவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இதன்போது வீதி நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மலர் வளையங்கள், மற்றும் உருவப்பொம்மைகள் போன்றவற்றை வடிவமைத்து தமது எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றனர்.

இலங்கையில் சுகாதாரத் துறையில் ஏற்பட்ட பிரச்னைகளுக்கு முன்னாள் அமைச்சர் கெஹலியவே பதில் கூறவேண்டும் என தெரிவித்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அத்துடன், முன்னாள் அமைச்சர் கெஹலிய கைது செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக கறுவாத் தோட்ட பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் நீர்த்தாரைப் பிரயோக வண்டிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டன. (அ)





# மயிலத்தமடுவில் பட்டிப் பொங்கல் நேற்று கறுப்புதினமாக அனுஷ்டிப்பு

## பானைகளுக்கு கறுப்பு பட்டி அணிவித்த விவசாயிகள்





மட்டக்களப்பு, ஜன. 17

மயிலத்தமடு பகுதியில் விவசாயிகள் நூதன போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

உழவர் திருநாளாம் பொங்கல் பண்டிகையின் இரண்டாவது நாளான நேற்று, பட்டி பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

இதனை முன்னிட்டு மயிலத்தமடுவைச் சேர்ந்த விவசாயிகள் இத்தினத்தை கறுப்பு தினம் எனக் கூறியும் பொங்கல் பானைக்கு கறுப்பு நிறத்திலான கறுப்பு நிற பட்டியை அணிவித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலத்தமடு பகுதியில் அத்துமீறி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவும் கால்நடைகளுக்கு ஏற்படும் வன்முறைகளுக்கு எதிராகவுமே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசின் நில ஆக்கிரமிப்பு மற்றும் பசு வதைக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து 124 ஆவது நாளாக தொடர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சியில் பாரம்பரிய முறைப்படி இடம்பெற்ற வடக்கு மாகாண பொங்கல்

## பிரதம அதிதியாக ஆளுநர் பங்கேற்றார்







கிளிநொச்சி, ஜன. 17

வடக்கு மாகாண புதிர் எடுத்தலும், தைப்பொங்கல் விழாவும் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல்லவராயன்கட்டு மாதிரி கிராமத்தில் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சார்ள்ஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பாரம்பரிய முறையில் பல்லவராயன் கட்டு சந்தியில் புதிர் எடுக்கப்பட்டு, விழா மண்டபம் வரை எடுத்து வரப்பட்டது. தொடர்ந்து விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து எடுத்து வரப்பட்ட புதிர் பாரம்பரிய முறைப்படி அரிசியாக்கப்பட்டு பொங்கலிடப்பட்டது.

அதனை தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானதுடன், கலை நிகழ்வுகளும் அரங்கில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அரச அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழா முன்னேற்பாடு குறித்து ஆராய கள விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 17

கச்சதீவு அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு முன் ஏற்பாடுகளுக்கான கள விஜயமொன்று நேற்று இடம்பெற்றது.

வரலாற்று சிறப்புமிக்க புனித கச்சத்தீவு அந்தோனியார் தேவாலயத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் வருடாந்த திருவிழா இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் திருவிழாவின் முன் ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், கள நிலவரங்கள் தொடர்பிலும் ஆராயவும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு குழுவினர் கச்சதீவு நோக்கி பயணித்துள்ளனர்.

இவ் விஜயத்தில் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ஸ்ரீமோகனன், நெடுந்தீவு பிரதேச செயலாளர் அ.ஜெயகாந்தன், நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு பீ.பீற்றர் ஜெய நேசன் உள்ளிட்ட மூவர் அடங்கிய குழுவினரும் மற்றும் தீவக கடற்படையின் பிரதான கண் காணிப்பாளர் மற்றும் கடற் படையினர் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது வருடாந்த திருவிழாவில் இந்திய, இலங்கை மக்களின் வருகையும், அவர்களுக்கான தங்குமிடவசதிகள், தேவாலயத் தின் துப்பரவுப்பணிகள், மருத்துவசதி உதவிகள், குடிதண்ணீர் பெற்றுக் கொடுத்தல், சிற்றுண்டி வசதிகள், படகுச் சேவை போக்குவரத்து ஒழுங்குகள் மற்றும் இதர பாதுகாப்பு வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. (அ)


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



### ஸ்பானிஷ் சூப்பர் கிண்ணம்:

# பார்சிலோனாவை வீழ்த்தி சம்பியனானது ரியல் மட்ரிட்




கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஸ்பானிஷ் சூப்பர் கிண்ண இறுதிப் போட்டியில் பார்சிலோனாவை 4-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ரியல் மட்ரிட் சம்பியன் பட்டம் வென்றது.

ஸ்பானிஸ் சூப்பர் கிண்ண இறுதிப் போட்டியானது சவுதி அரேபியாவின் ரியாத்தில் அமைந்துள்ள அல்-அவ்வல் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் வினிசியஸ் ஜூனியர் ஹட்ரிக் கோல் அடித்து அசத்தியதுடன், ரியல் மட்ரிட் அணி போட்டியின் ஒவ்வொரு அம்சத்திலும் ஆதிக்கம் செலுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.




## போலியான செய்திகளுக்கு பதிலளிக்கப்போவதில்லை

சமூக வலைத்தளங்களில் பரவும் போலியான செய்திகள் தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்க தயாராக இல்லை என இலங்கை இருபதுக்கு 20 அணியின் தலைவர் வனிந்து ஹசரங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சினமன் கிராண்ட் நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வனிந்து ஹசரங்க இதனை தெரிவித்துள்ளார்.

அணியின் தலைவராகவும் ஓர் அணியாகவும் எதிர்வரும் ரி-20 உலகக் கிண்ணத்தை வெல்வதே தமது இலக்கு ஏ்றும் வனிந்து ஹசரங்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கை அணியின் சிரேஷ்ட வீரரான அஞ்சலோ மத்தியூஸ் அணிக்குள் உள்வாங்கப்பட்டமை குறித்தும் அவரிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், மத்தியூஸ் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவிக்கவில்லை என்றும் ஆகவே அவரை அணிக்குள் உள்வாங்குவதில் பிரச்சினை இல்லை என்றும் கூறினார்.

மேலும் மத்யூஸ் போன்ற வீரரின் அனுபவம் அணிக்கு அவசியம் என்றும் அது அவரது விளையாட்டில் பார்க்க முடியும் என்றும் வனிந்து ஹசரங்க தெரிவித்துள்ளார்.

## பிரித்தானியாவின் முன்னணி உதைபந்து கழகத்தில் தமிழ் வீரர்

பிரித்தானியாவின் முன்னணி உதைபந்து கழகமான பார்ன்ஸ்லி அணியில் இணைந்து விளையாடும் வாய்ப்பை இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் இளைஞர் பெற்றுள்ளார்.

18 வயதான விமல் யோகநாதன் பிரித்தானியாவின் முக்கிய உதைபந்தாட்ட கழகத்தோடு இரண்டரை வருட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

இதன் மூலம் ஆங்கில கால்பந்து தொடரில் இடம் பெற்ற முதல் தமிழ் வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

இது தனக்கும் தனது குடும்பத்திற்கும் மிகப்பெரிய தருணம் என்றும் கடந்த 10 ஆண்டுகளாக உழைத்த கடின உழைப்பின் பெறுபேறு என்றும் விமல் யோகநாதன் குறிப்பிட்டுள்ளார்.





### அவுஸ்திரேலிய ஓபன்:

## முதல் சுற்று ஆட்டத்தில் ஓசாகா, முர்ரே தோல்வி

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் கிராண்ஸ்லாம் போட்டிகளுக்கு மீண்டும் திரும்பியுள்ள ஜப்பானின் நவோமி ஓசாகா பிரான்சின் கரோலின் கார்சியாவுடனான முதல் சுற்று ஆட்டத்தில் தோல்வியை சந்தித்துள்ளார்.

இரண்டு முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியனான ஓசாகா, 2022 செப்ரெம்பரில் நடந்த அமெரிக்க ஓபனுக்கு பின்னர், தனது முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் 6-4 7-6 (7-2) என்ற கணக்கில் 16 ஆம் நிலை வீராங்கனையிடம் தோல்வியைத் தழுவினார்.

இந்த தோல்வி குறித்து ஊடகங்களிடம் பேசிய அவர், ஆட்டத்தில் என்னால் முடிந்ததைச் சிறப்பாகச் செய்ததைப் போல் உணர்ந்தேன் என்று கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த தொடரில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் இங்கிலாந்து முன்னணி வீரர் ஆண்டி முர்ரே அர்ஜெண்டினா வீரர் டோமஸ் மார்ட்டினுடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் 36 வயதான ஆண்டி முர்ரே 6-4 6-2 6-2 என்ற கணக்கில் தோல்வியை சந்தித்தார்.

இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் தொடங்கி எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நடக்கிறது.

இதில் பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

தொடக்க நாளில் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டங்களில் தரவரிசையில் நம்பர் 1 வீரரான ஜோகோவிச், ஆண்டி ரூபலேவ், சின்னர் ஆகியோர் வெற்றிபெற்று 2 ஆவது சுற்றுக்கு முன்னேறியமையும் குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலிய வீரர் துருக்கியில் கைது



ஓர் இஸ்ரேலிய உதைபந்தாட்ட வீரர் ஒரு கோல் கொண்டாட்டத்தின் போது ஒக்ரோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தி 100 நாட்கள் ஆகின்றது என்ற செய்தியை காண்பித்த பின்னர் துருக்கிய நீதிமன்றில் வழக்குத் தாக்கலை எதிர்கொண்டதுடன், அவரது கழகத்திலிருந்தும் நீக்கப்பட்டார்.

28 வயதான சாகிவ் ஜெஹெஸ்கெல், கடந்த ஞாயிற்றுக்கிழமை டிராப்ஸோன்ஸ்போருக்கு எதிரான போட்டியில் அன்டலியாஸ்போர் அணிக்காக ஒரு கோல் அடித்ததை கொண்டாடும் போது, “100 நாட்கள். 07/10” என்று தனது கை மணிக்கட்டில் கட்டப்பட்டிருந்த பட்டியை காண்பித்தார்.


யூத அரசின் மீதான போராளிக் குழுவின் தாக்குதலின் 100 நாட்களுக்குப் பின்னரும் காசாவில் ஹமாஸ் இன்னும் பணயக் கைதிகளை சிறைப்பிடித்து வைத்திருப்பதைக் குறிப்பதாக இந்த காட்சி பரவலாகக் கருதப்பட்டது.

மேலும், காசாவில் இஸ்ரேலின் படுகொலையை கால்பந்து வீரர் ஆதரிப்பதாக துருக்கி குற்றம் சாட்டியது.

துருக்கி நியூ ஆண்டலியா மைதானத்தில் நடைபெற்ற இந்த சம்பவத்துக்கு பின்னர், அன்டலியாஸ்போர் அணியின் முன்கள வீரரான சாகிவ் ஜெஹெஸ்கெல் கைது செய்யப்பட்டு அவரது துருக்கிய கழகத்தில் இருந்தும் இடைநீக்கம் செய்யப்பட்டார்.

துருக்கி நீதிமன்றம் விசாரணை நிலுவையில் இருந்தும் விடுவிக்கப்பட்ட சாகிவ் ஜெஹெஸ்கெலை அவரது சொந்த நாடான இஸ்ரேலுக்கு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# இந்திய ராணுவம் வெளியேற மாலத்தீவு கெடு: சீனா சென்று திரும்பியதும் முய்சு ஆக்ரோஷம் ஏன்?



மாலத்தீவு அதிபர் முகமது முய்சுவின் அரசு இந்திய ராணுவ வீரர்களை மார்ச் 15ஆம் தேதிக்குள் மாலத்தீவை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தியப் படைகளை வாபஸ் பெறும் நடவடிக்கையை தொடங்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டிருப்பதாக மாலத்தீவு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய ராணுவத்தை வாபஸ் பெறுவதற்கான காலக்கெடு குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாலத்தீவு தலைநகர் மாலேயில் உயர்மட்ட மையக் குழுக் கூட்டம் நடைபெற்றதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது.

மாலத்தீவு மக்களுக்கு மனிதாபிமான மற்றும் மருத்துவ வசதிகளை வழங்கும் இந்தியாவின் விமானப் போக்குவரத்து தளத்தை தொடர்ந்து இயங்க வைப்பதற்கான தீர்வை காண்பது குறித்து இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே மற்றொரு சந்திப்பும் நடைபெறவுள்ளது.

இந்தியப் படைகளை வாபஸ் பெறுவது தொடர்பாக இரு நாடுகளிலும் நடைபெற்ற உயர்மட்டக் குழுக் கூட்டத்துக்குப் பிறகு வெளியிடப்பட்ட அறிக்கைகளில் ஒற்றுமை இல்லை. ஒருபுறம், படைகளை வாபஸ் பெற இந்தியா தயாராக இருப்பதாக மாலத்தீவும், மறுபுறம் அப்படி எதுவும் கூறவில்லை என்று இந்தியாவும் கூறி வருகின்றன.

இரு நாடுகளுக்கும் இடையே பதற்றமான சூழல் நிலவும் நிலையில் மாலத்தீவில் உள்ள முய்சு அரசு இந்தியாவுக்கு இந்த காலக்கெடுவை வழங்கியுள்ளது.

### மாலத்தீவு குறித்து ஜெய்சங்கர் என்ன சொன்னார்?

ஞாயிற்றுக்கிழமை, மாலத்தீவு அதிபரின் பொதுக் கொள்கைக்கான பிரதம செயலாளர் அப்துல்லா நஜிம் இப்ராஹிம் செய்தியாளர் சந்திப்பின் போது இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பிடிஐ செய்தி முகமை வெளியிட்டுள்ள செய்தியின் படி, சமீபத்திய அரசாங்க புள்ளிவிவரங்களின்படி, மாலத்தீவில் தற்போது 88 இந்திய வீரர்கள் உள்ளனர்.




முகமது முய்சு கடந்த தேர்தலில் 'இந்தியாவை வெளியேற்றுவோம்" என்ற முழக்கத்தைக் கொடுத்தார். அதிபரான பிறகு, அவரது ஆரம்ப முன்னுரிமைகளில் ஒன்று இந்திய துருப்புகளை திரும்பப் பெறச் செய்வதாகும்.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கடந்த வாரம் சனிக்கிழமை நாக்பூரில் உள்ள மந்தன் டவுன்ஹாலில் உரையாற்றினார்.

அதன்போது, மாலத்தீவுடனான உறவு மோசமடைந்து வருவது குறித்து அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, "ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொருவரும் எங்களை ஆதரிப்பார்கள் அல்லது எங்களுடன் உடன்படுவார்கள் என்று என்னால் உத்தரவாதம் அளிக்க முடியாது. கடந்த 10 ஆண்டுகளில் சிறப்பாக செயல்பட முயற்சி செய்து வெற்றி பெற்றுள்ளோம். பல சந்தர்ப்பங்களில் நாங்கள் வலுவான தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளோம். இந்தியா - மாலத்தீவு அரசியல் உறவில் கொந்தளிப்பு நிலவுகிறது ஆனால், மாலத்தீவில் உள்ள சாமானியர்களுக்கு இந்தியாவைப் பற்றி நல்ல அபிப்பிராயம் உள்ளது, இந்தியாவுடனான நல்லுறவின் முக்கியத்துவம் அவர்களுக்குத் தெரியும்." என ஜெய்சங்கர் பதில் அளித்தார்.


### "மாலத்தீவில் இந்திய வீரர்கள் தங்க முடியாது"

மார்ச் 15 ஆம் தேதிக்குள் துருப்புகளை வாபஸ் பெறுமாறு முகமது முய்சு இந்தியாவுக்கு காலக்கெடு விதித்துள்ளதாக மாலத்தீவைச் சேர்ந்த ஒன் ஆன்லைன் எனும் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

மாலத்தீவு அரசாங்கத்தின் பொதுக் கொள்கை முதன்மைச் செயலாளர் அப்துல்லா நசீம் இப்ராஹிம், இந்திய வீரர்கள் மாலத்தீவில் தங்க முடியாது என்றும், நாட்டு மக்களும் அதையே விரும்புகிறார்கள் என்றும் கூறினார்.

முகமது முய்சு மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் சந்தித்த போதும் இந்த பிரச்சினை எழுப்பப்பட்டதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மாலத்தீவில் இருந்து தனது இராணுவ வீரர்களை உடனடியாக அகற்ற இந்தியா ஒப்புக்கொண்டதாகவும் இந்த விவகாரம் குறித்து ஆலோசிக்க இந்தியாவில் இருந்து சிறப்புக் குழு வந்துள்ளதாகவும் மாலத்தீவு வெளியுறவு அமைச்சகம் கூறுவதாக ஒன் ஆன்லைன் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.



### சீனப் பயணத்துக்கு பிறகு முய்சுவிடம் உள்ள மாற்றங்கள்

மாலத்தீவு அதிபரான முகமது முய்சு, சீனாவுக்கு தனது முதல் அதிகாரப்பூர்வ பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய பிறகு, இந்தியா மீது ஆக்ரோஷமான அணுகுமுறையைக் கடைப்பிடித்துள்ளார். இந்தியா என்ற பெயரை குறிப்பிடாமல் மறைமுகமாக இந்தியாவை தாக்குகிறார் முகமது முய்சு.

இந்தியா மற்றும் பிரதமர் மோடி குறித்து மாலத்தீவு அமைச்சர்கள் கூறிய ஆட்சேபகரமான கருத்துகளுக்குப் பிறகு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டுள்ள பிரச்னையை நீக்க சில சாதகமான முயற்சிகள் எடுக்கப்படலாம் என்று நம்பப்பட்டது.

மாலத்தீவின் எதிர்க்கட்சிகளும் அமைச்சர்களை இடைநீக்கம் செய்வது போதாது என்றும், இந்த விவகாரத்தில் மாலத்தீவு அரசு அதிகாரப்பூர்வமாக இந்தியாவுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றும் கோரி வந்தது.

ஆனால், சனிக்கிழமையன்று, சீனாவுக்கு ஐந்து நாள் பயணமாக சென்று திரும்பிய முய்சு, பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது, "நாம் ஒரு சிறிய நாடாக இருக்கலாம், ஆனால் அது எங்களை அச்சுறுத்தும் உரிமத்தை யாருக்கும் வழங்காது" என்று கூறினார்.

இந்தியப் பெருங்கடல் குறித்து அவர் கூறுகையில், "இந்தக் கடல் குறிப்பிட்ட நாட்டிற்கு சொந்தமானது அல்ல. இது அதைச் சுற்றியுள்ள அனைத்து நாடுகளுக்கும் சொந்தமானது." எனத் தெரிவித்தார்.

முய்சு மேலும் கூறுகையில், "நாங்கள் யாரோ ஒருவரின் கொல்லைப்புறத்தில் இருக்கும் நாடு அல்ல, நாங்கள் ஒரு சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட நாடு." எனத் தெரிவித்தார்.

இவை அனைத்தின் போதும், மாலத்தீவு அதிபர் எந்த நாட்டின் பெயரையும் குறிப்பிடவில்லை. ஆனால், இந்தியாவிற்கும் மாலத்தீவிற்கும் இடையிலான சமீபத்திய பதற்றத்தின் மத்தியில், அவர் பேசுவது இந்தியாவுடன் தொடர்புடையது என்று நம்பப்படுகிறது.



இந்த அறிக்கைகளைத் தவிர, முய்சு சீனாவிலிருந்து மாலத்தீவுக்குத் திரும்பியவுடன், அங்குள்ள அரசாங்கம் இந்தியாவுடன் நேரடியாக தொடர்புடைய சில முடிவுகளை எடுத்தது.

மாலத்தீவு நோயாளிகள், உயர் சுகாதார வசதிகள் மற்றும் சிகிச்சைக்காக இந்தியாவிற்கும் வேறு சில நாடுகளுக்கும் அனுப்பப்பட்டதைப் போல, அவர்கள் இனி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மலேசியாவிற்கு அனுப்பப்படுவார்கள் என்று முய்சு தனது சீன பயணத்திற்கு பின் அறிவித்தார்.

இது தவிர, இந்தியா - மாலத்தீவு பதற்றத்தில் இருக்கக் கூடிய சமீபத்திய செய்திதான், தனது படைகளை மார்ச் 15-ஆம் தேதிக்குள் திரும்பப் பெறுமாறு இந்தியாவை மாலத்தீவு ஞாயிற்றுக்கிழமை கேட்டுக்கொண்டிருப்பது.

### சீனா சென்று திரும்பியதும் முய்சு ஆக்ரோஷம் ஏன்?

முகமது முய்சுவின் இந்திய விரோத நிலைப்பாடு புதிய விஷயம் அல்ல. கடந்த ஆண்டு அவர் தேர்தலில் போட்டியிட்ட போது, அவரது தேர்தல் பிரசாரம் இந்திய எதிர்ப்பு என்ற புள்ளியில் கவனம் செலுத்தியது.

"இந்தியாவை வெளியேற்றுவோம்" என்ற கோஷத்தை எழுப்பிய அவர், தான் ஆட்சிக்கு வந்தவுடன், மாலத்தீவில் இருக்கும் இந்திய ராணுவ வீரர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று உறுதியளித்தார்.

ஆனால், சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியவுடனேயே முய்சு இந்தியா மீது காட்டியுள்ள ஆக்ரோஷத்துக்குக் காரணம் என்ன?

டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியரும், சர்வதேச விவகாரங்களில் நிபுணருமான எஸ்.டி.முனி இது குறித்து கூறுகையில், "முகமது முய்சு இந்தியாவின் பெயரை குறிப்பிடாமல் இருக்கலாம். ஆனால், அவரது பேச்சு இந்தியாவை நோக்கிதான் இருந்தது. அதே சமயம், முய்சுவின் இந்த கருத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படக் கூடாது" என தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "கோட்பாட்டு ரீதியாக, எந்த நாடும் எந்த நேரத்திலும் தன்னை இறையாண்மை



கொண்ட நாடு என்று சொல்லலாம். இது சாதாரணமாக பார்க்கப்பட வேண்டும். ஏனென்றால் பெரிய நாடுகள் நம்மைத் தாக்கும் என்று சிறிய நாடுகள் எப்போதும் பயப்படுகின்றன." எனத் தெரிவித்தார்.

மேலும், "முய்சு சீனாவில் இருந்து திரும்பி வந்துவிட்டார். நாங்கள் உங்களுக்கு உதவுவோம் என்றும் நீங்கள் உங்கள் சுதந்திரமான கொள்கையை பின்பற்றுங்கள் என்றும் மாலத்தீவுக்கு சீனா உறுதியளித்திருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சீனாவின் ஆதரவு உள்ளது என முய்சுவின் மனதில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். இதை நான் வெளிப்படையாக சொல்ல முடியும்." என அவர் தெரிவித்தார். ●

# சர்வதேச நீதிமன்ற விவகாரம்: நுட்பமாக கையாளும் இலங்கை!

அ.நிக்ஸன்

காசாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்துள்ளதை அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் கண்டித்திருக்கின்றன. ஆனாலும் அமெரிக்காவிடவும் ஐரோப்பிய நாடுகள் காசாவில் நடக்கும் மனிதப்படுகொலைகளை கண்டிப்பதுடன் இஸ்ரேல் அரசு மீதும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. காசாவில் தொடரும் உயிரிழப்புகள் ஏற்க முடியாதவை என நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை கூட்டத்தில் இந்தியா அறிவித்துள்ளது. பலஸ்தீன காசா பகுதியில் நிலவும் சூழல் குறித்து இந்தியாவின் தற்போதைய நிலைப்பாட்டை தெரிவித்து உரையாற்றும் போது இந்தியாவின் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி ருசிரா கம்போஜ் இவ்வாறு கூறியிருக்கிறார்.

ஆனாலும் இஸ்ரேல் அரசுடன் இந்திய மத்திய அரசு கொள்கையளவில் கைகோர்த்திருக்கிறது. தென்னாபிரிக்க அரசு இன அழிப்பு என்று வழக்குத் தாக்கதல் செய்திருப்பதை இந்திய மத்திய அரசு இதுவரையும் பகிரங்கமாக வரவேற்கவில்லை. மதில்போல் பூனை போன்று உள்ளது.

ஆகவே அமெரிக்க - இந்திய அரசுகள் இஸ்ரேலுடன் நிற்பதை அறிந்தே தென்னாபிரிக்கா தாக்கல் செய்த வழக்கை தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபடும் தமிழ்க் கட்சிகளும் பகிரங்கமாக வரவேற்கவில்லை என்பது தெரிகிறது. தமிழ் சிவில் சமூக அமைப்புகளும் பாராட்ட வில்லை.

இஸ்ரேலுடன் இணைந்து கமாஸ் இயக்கத்தை அழிக்க வேண்டும் என்பதில் அமெரிக்க இந்திய அரசுகள் ஓரணியில் நிற்கின்றன. தற்போதைய புவிசார் அரசியல் சூழலில் வல்லரசுகளிடையே எழுந்துள்ள அரசியல் போட்டியில் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா முற்று முழு தாக மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்பாள னாக மாறியிருக்கிறார்.

அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளின் எதிராலியாக தென்னாபிரிக்கா, சர்வதேச நீதிமன்றத்தில் பலஸ்தீன மக்கள் சார்பில் காசாவில் நடப்பது இன அழிப்பு என்று பகிரங்கப்படுத்தி வழக்கும் தாக்கதல் செய்திருந்தாலும் அதனை பலஸ்த்தீன புலம்பெயர் அமைப்புகள் நன்கு பயன்படுத்தி வருகின்றன.

சென்ற வியாழக்கிழமை ஆரம்பித்த முதல் நாள் விசாரணையில் தனது தரப்பு வாதங்களை தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் முன்வைத்துள்ளது. காசாவில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தென்னாபிரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க மாநில அரசுகளின் உறுப்பினர்கள் இருநூறு பேர் காசாவில் போர் போர்நிறுத்தம் செய்ய வலியுறுத்தி ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

சென்ற ஒக்ரோபர் ஏழாம் திகதி போர் ஆரம்பிக்கப்பட்ட நான்கு மாதங்களுக்கும் குறைவான நிலையில் காசாவில் இறந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்தையும் கடந்துள்ளதாகவும் இதனால் போரை நிறுத்துமாறும் அமெரிக்க உள்ளூார் பொது அமைப்புகளும் ஜோ பைடனுக்கு கடிதம் எழுதியிருக்கின்றன.

சர்வதேச நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்க எழுநூறு இஸ்ரேல் மக்கள் விரும்பம் தெரிவித்துள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்களே செய்தி வெளியிட்டிருக்கின்றன. இஸ்ரேலிய மக்களின் எழுபத்து ஐந்து சதவீதமான மக்கள் காசாவில் போர் நடப்பதை விரும்புகின்றனர் என்றும் இந்த நிலையில் எழுநூறு பொது மக்கள் பலஸ்தீன மக்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தில் வாக்குமூலம் வழங்கத் தயாராக இருப்பதாகவும் இஸ்ரேலிய ஊடகங்கள் கூறுகின்றன.

இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கதல் செய்துள்ளதால் கணிசமான அளவு இஸ்ரேலிய மக்களுக்கு அச்சம் ஏற்பட்டு விட்டதாக அரபு ஊடகமான நியுஅரப் என்ற ஆங்கில செய்தி இணையத்தளம் கூறுகின்றது.

மியன்மாரில் ரோகின்கிய முஸ்லிம் மக்களுக்கு நடப்பது இன அழிப்பு என்று சர்வதேச நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வழக்கு விசாரணைக்கு முழுமையான ஆதரவு வழங்கி வரும் பிரித்தானியா, காசாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா தாக்கல் செய்துள்ள வழக்குத் தொடர்பாக அமைதியாக இருக்கின்றது.

சட்ட ஆதாரங்களை தேட வேண்டும் என்று மாத்திரம் பிரித்தானியா கூறியிருக்கிறது. அதேபோன்று கனடாவும் கூறுகின்றது. காசாவில் நடப்பது இன அழிப்புத் தொடர்பான சர்வதேசச் சட்டங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கனடா கூறுகின்றது.

தென்னாபிரிக்க அரசு மேற்கு எதிர்ப்புத் தன்மை கொண்டது என்பதால், பிரித்தானிய, கனடா போன்ற நாடுகள் தென்னாபிரிக்க அரசு சர்வதேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குக்கு ஆதரவு வழங்கத் தயங்குகின்றன.

ஆகவே ரஷ்ய - உக்ரெயன் போர்ச் சூழலில் குழப்பியிருந்த உலக அரசியல் ஒழுங்கு தற்போது இஸ்ரேல் - கமாஸ் போர் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து மேலும் குழப்பமடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.



> **சர்வதேச நீதி என்பது உலக நாடுகளின் புவிசார் அரசியல் நலன்களில் தங்கியுள்ளது. ரோஹிகின்ய முஸ்லிம்களுக்கு நடப்பது இன அழிப்பு என்பதை ஏற்றுக்கொள்ளும் பிரித்தானியா, காசாவில் நடப்பது இன அழிப்பு என்பதை ஏற்கத் தயங்கும் காரணம் என்ன என்பதைப் புரிந்துகொண்டு சர்வதேச அரசியலை இலங்கை நன்கு கையாளுகின்றது.**

தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்த பின்னர் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளிடையேயான உலக அரசியல் அணுகுமுறையில் முன்னுக்குப் பின்ன முரணான வாதங்கள் எழுந்துள்ளதையும் அவதானிக்க முடியும்.

இந்த அரசியல் சூழ்நிலையை இலங்கை நன்கு பயன்படுத்துகிறது குறிப்பாக முள்ளிவாய்க்கால் போரில் சுமார் நாற்பதாயிரம் மக்கள் கொல்லப்பட்டும் ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் காணாமல் போயிருப்பதாகவும் 2010 இல் வெளியான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஆனாலும் இன அழிப்பு என்று எந்த ஒரு நாடும் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முன்வரவில்லை. இதற்கு அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச இந்தியாவைக் கையாண்ட அணுகுமுறையே காரணம் என்பது வெளிப்படை.

நான்கு மாதங்களில் 23 ஆயிரும் மக்கள் கொல்லப்பட்ட பின்னர் காசாவில் நடப்பது இன அழிப்பு என்று தென்னாபிரிக்கா வழக்குத் தாக்கல் செய்ததை உணர்ந்தும் அச்சமடைந்த நிலையிலும் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. சர்வதேசத்தை நுட்பமாகக் கையாள ஆரம்பித்திருக்கிறார்.

தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதை மத்திய கிழக்கு நாடுகள் வரவேற்றுள்ளன. இப் பின்னணியில் மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களுடன் ரணில் விக்கிரமசிங்க சென்ற புதன்கிழமை பேச்சு நடத்தியிருக்கிறார். தூதுவர்களுடன் பேசப்பட்ட விடயங்கள் எதுவும் ஊடகங்களில் வெளிவரவில்லை.

ஆனால் மத்திய கிழக்கு பிராந்தியம் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கைகள் தொடர்பாக ரணில் தூதுவர்களிடம் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஏனைய கொழும்பில் உள்ள மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் அல்லாத நாடுகளின் தூதுவர்களையும் ரணில் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று கொழும்பு உயர்மட்ட அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

ஏனெனில் குழப்பியுள்ள உலக அரசியல் ஒழுங்குச் சூழலில் எந்த ஒரு சிறி நாடுகளின் ஒத்துழைப்புகளும் அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்கு தேவைப்படுகின்றன. அதேபோன்று சில புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் ஏதாவதொரு சிறிய நாடுகளைப் பயன்படுத்தக் கூடும் என்ற அச்ச நிலை இலங்கைக்குத் தற்போது உரு வாகியுள்ளது.

குறிப்பாக கனடா, இலங்கைத்தீவில் ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்று கூறி வருகின்றது. அதுவும் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் ஏட்டிக்குப் போட்டியாக கனடா புலம் பெயர் தமிழர்களின் வாக்குகளை மையமாகக் கொண்டு பேசி வரு கின்றன.

சில சமயங்களில் கனடாவின் வெளியுறவுக் கொள்கையில் தமிழ் இனஅழிப்பு என்பது இணைக்கப்பட்டால் அதனை மையமாகக் கொண்டு வேறு சில சிறிய நாடுகளைப் புலம்பெயர் தமிழர்கள் பயன்படுத்துவார்கள் என்று கருதியே அதனைத் தடுக்கும் முன்னேற்பாடுகளில் இலங்கையின் வெளியுலக இராஜதந்திர சேவை அதிகளவு கவனம் செலுத்துகின்றது.

மத்திய கிழக்கு நாடுகளைச் சந்தித்து பலஸ்தீன மக்களுக்கு இலங்கை முழு ஆதரவு என்று ரணில் உறுதியளித்திருந்தாலும், அமெரிக்க - இந்திய அரசுகளைப் பகைத்துகொள்ளாத முறையில் இஸ்ரேல் அரசுடன் இலங்கை முழு அளவில் மறைமுகமாகக் கைகோர்த்திருக்கிறது என்பது தான் உண்மை.

1983 இல் ஜே.ஆர்.ஜயவர்த் தனவின் ஆட்சிக்காலத்தில் வடக்குக் கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது குறித்து இஸ்ரேல் ஆலோ சனை வழங்கியிருந்தமையும் தற்போது ஆதரவு வழங்கக் காரணம்.

இலங்கையைப் பொறுத்தவரை தற்போதைக்குச் சீனாவை ஓரளவுக்குத் தூரத் தள்ளிவைப்பது போன்றதொரு தோற்றத்தைக் காண்பித்தாலும், சீனாவுக்குத் தாக்கம் எழாத முறையில் அமெரிக்க - இந்திய அரசுகளை இலங்கை அரவனைத்துக் கொண்டிருக்கிறது.

அதற்கான காரண - காரியம் என்பது குழப்பியுள்ள உலக அரசியல் ஒழுங்கு நிலைமைக்குள் கனடா ஊடாக வேறு சிறிய நாடுகளை புலம்பெயர் தமிழர்கள் நாடிவிடக் கூடும் என்ற அச்சமே.

இலங்கையும் முற்று முழுதாகச் சீனாவின் பக்கம் செல்வதைத் தடுக்கும் நோக்கிலேயே ஈழத்தமிழர்களுக்கு

(16ம் பக்கம் பார்க்க)

# குறைந்த விளைச்சல் விவசாயிகள் கவலை

திருமலை, ஜன. 17

தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியின் பத்தினிபுரம் கிராம பகுதியில் இயந்திரம் மூலமான அறுவடை இடம் பெற்று வருகிறது.

இப் பகுதியின் நீர், நாவல் மொட்டை வயல் நிலப் பகுதிகளில் அதிகளவான அறுவடை இடம்பெற்றாலும் விளைச்சல் குறைவு என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், இப் பகுதியில் சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமான ஏக்கர் நிலங்களில் நெற் செய்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், அதிகளவான நோய் தாக்கம், பசளை கிருமி நாசினி விலைகளின் அதிகரிப்பு, சீறற்ற கால நிலை காரணமாக விளைச்சளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக நஷ்டத்தை எதிர் நோக்கியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். ஒரு நெல் மூடை 6000 ரூபா வரை செல்கிறது. ஒரு ஏக்கருக்கு 10 தொடக்கம் 12 வரை மூடைகளே கிடைக்கப் பெறுவதுடன் வெட்டு கூலிக்கு ஏக்கருக்கு 15,000 ரூபா வரை செல்கிறது இப்படி போக விலைச்சலில் எவ்வித இலாபமும் இல்லை எனவும் கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும் வெள்ள நீர் வேளாண்மை செய்கையை பாதித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கின்றனர்.




எனவே விவசாயிகளாகிய எங்களுக்கு நட்ட ஈட்டை பெற்றுத் தருமாறு உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கின்றனர். (அ)

# சர்வதேச நீதிமன்ற விவகாரம்:...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தது இன அழிப்பு என்பதைக் கனடாவின் பிரதான அரசியல் கட்சிகள் மூலமாக அமெரிக்கா சொல்ல வைக் கிறது என்ற அவதானிப்புகளும் இல்லாமில்லை.

அதேநேரம் காம்பியா என்ற ஆபிரிக்காவின் சிறிய நாடு ஒன்றுதான் ரோஹின்கிய முஸ்லிம் மக்களுக்கு நடப்பது இனஅழிப்பு என்று சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறது. இதனை பிரித்தானியா முழுமையாக ஆதரித்து வருகின்றது.

ஆகவே இவ்வாறான ஒரு பின்னணி புலம்பெயர் அமைப்புகளுக்கு வந்துவிடும் என்ற அச்சம் மற்றும் எதிர்வுகூறல் இலங்கைக்கு உண்டு. இதற்கு ஏற்ப பல அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் இலங்கைத்தீவுக்குள்ளும் வெளியுலகத்திலும் ஆரம்பிக்கப்பட்டு அரங்கேறி வருகின்றன.

இலங்கையின் இத் திட்டத்திற்கு ஜேர்மன், சுவிஸ்லாந்து போன்ற நாடுகளும் ஒத்துழைக்கின்றன.

ஆனால் தமிழ்த்தரப்பில் இந்த உத்திகள் எதுவுமே இல்லை. தமிழரசுக் கட்சியின் தலைவர் போட்டி, ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துவது மற்றும் போலித் துவாரகா பற்றிய ஆய்வுகளையே தமிழ்த்தரப்பு செய்து கொண்டிருக்கிறது. பல தமிழ் ஊடகங்களும் இதற்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கின்றன.

குறைந்தபட்சம் தென்னாபிரிக்க அரசைப் பாராட்டி ஜனாதிபதி சிறில் ரமபோசாவுக்குக் தமிழ்த்தேசியக் கட்சிகள் கடிதம் எழுதியிருக்கலாம். இன அழிப்பு என்று கூறிவரும் கனடாவின் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளான கென்சர்வேற்டீவ், லிபரல் கட்சி ஆகியவற்றின் தலைவர்களுக்குக் கடிதத்தின் மூலம் பாராட்டிருயிருக்கலாம்.

ஆகவே அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாகவும் இந்தியாவின் வஞ்சக அரசியல் செயற்பாட்டுக்குள்ளும் தமிழ்த்தேசியக் கட்சிகள் முடங்கியுள்ளன என்பதையே இது பகிரங்கப்படுத்துகின்றது.

2006 இல் விடுதலைப் புலிகளைத் தடை செய்த கென்சர்வேற்றீவ் கட்சி ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்புத்தான் என்று கூறுவதுடன், பதவிக்கு வந்தால் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆகவே பலஸ்த்தீன மக்களை ஆதரிப்பதாகக் காண்பித்துக் கொண்டு இஸ்ரேல் அரசின் பக்கம் இலங்கை நிற்பது போன்று அமெரிக்க இந்திய அரசுகளுக்குக் இரட்டை வேடம்போடுகின்றது. ஆனால் அரசு அற்ற சமூகமாகக் கடந்த எண்பது வருடங்கள் அரசியல் போராட்டம் நடத்தி வரும் ஈழத்தமிழ்த் தரப்பு, 2009 மே மாதத்திற்குப் பின்னரான சூழலில் ஏன் அமெரிக்க - இந்திய அரசுகளுக்கு மாத்திரம் விசுவாசமாக இருக்கின்றன?

2014 வரையும் தென்னாபிரிக்க அரசு ஈழத்தமிழர் பக்கம் நின்றது. ஆனால் அதனைத் தமிழர் தரப்பு உரிய முறையில் கையாளவில்லை. பிரதி ஜனாதிபதியாக இருந்த சிறில் ரமபோசா 2020 இல் தென்னாபிரிக்க ஜனாதிபதியாக வரக்கூடும் என்று கணித்து அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச சிறிரமபோசவை இலங்கைக்குப் பல தடவைகள் அழைத்துப் பேசியிருக்கிறார்.

ஈழத்தமிழர் பிரச்சினை 2009 இல் முடிவடைந்து விட்டது என்றும் இலங்கையில் இன நல்லிணக்கமே அவசியம் என்றும் போதித்திருக்கிறார். இன்று இமாலயப் பிரகடனத்துக்கு தென்னாபிரிக்கா முழு ஆதரவு வழங்குவதுடன் ஈழத்தமிழர்கள் இலங்கையர்களாக வாழ முடியும் என்றும் கூற ஆரம்பித்துள்ளது.

ஆகவே உல அரசியல் விவகாரங்களை அறிந்து நுட்பமாகக் கையாள்வதற்குரிய புதிய இளம் தலைமை ஒன்று ஆங்கில அறிவுடன் உருவாக வேண்டும்.

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் வல்லரசாகத் தன்னைக் காணிப்பிக்க முற்படும் இந்தியா, சர்வதேச விவாகாரங்களில் இரட்டை வெளியுறவுக் கொள்கைகளோடு எவ்வாறு பயணிக்கிறது என்பதற்கும், சிறிய நாடான இலங்கை ஈழத்தமிழர் விவகாரத்தைச் சர்வதேச அரங்கில் இருந்து முற்றாக நீக்கம் செய்ய, மேற்கு மற்றும் ஐரேப்பிய நாடுகளையும் இந்தியாவையும் அதேநேரம் பொருளாதார உதவிகளைப் பெற சீனாவையும் எவ்வாறு நுட்பமாகக் கையாள்கின்றது என்பதற்கும் கண்முன்னே பல உதாரணங்கள், படிப்பினைகள் உண்டு.

சர்வதேச நீதி என்பது உலக நாடுகளின் புவிசார் அரசியல் நலன்களில் தங்கியுள்ளது. ரோஹிகின்ய முஸ்லிம்களுக்கு நடப்பது இன அழிப்பு என்பதை ஏற்றுக்கொள்ளும் பிரித்தானியா, காசாவில் நடப்பது இன அழிப்பு என்பதை ஏற்கத் தயங்கும் காரணம் என்ன என்பதைப் புரிந்துகொண்டு சர்வதேச அரசியலை இலங்கை நன்கு கையாளுகின்றது, காய் நகர்த்துகின்றது. ஆனால் தமிழ்த் தரப்பு?

